Regd No. M. 4900

16 பக்கங்கள்.

# குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 19-2-1949 சனிக்கிழமை } மலர் 24.

## ஏடுகளே! எழுதுங்கள்.

★

1. மடங்களின் மேல் சட்டமொன்று செயப் புகுந்தால்,
மடிசஞ்சிப் பார்ப்பனர்கள் மதம்பிடித்து,
மடத்தனமாய் எதிர்க்கின்றார் வெட்கம்! வெட்கம்!!
மடம் தாழ்ந்தால் அழியும் மதம் மதமே ஆமோ?
கடவுளென்றும் இறைவனென்றும் கல்லைக் காட்டி,
கருத்ததனில் குழப்பமதை உண்டு பண்ணி,
தடபுடலாய் வாழ்வதற்குப் பொது அறிவைத்
தவிடு பொடி யாக்குவோர்க்கிங் கென்ன வேலை?

2. ஆடொன்று மழையினிலே நனைந்து நிற்க,
அதைப்பார்த்து அழுகின்ற ஓநாயைப் போல்
கேடுகெட்ட பார்ப்பனர்கள் மடத் தலைவர்
கீழ்நிலைக்குப் போகிறார் என்(று) அழுகின் றார்கள்;
ஏடுகளே! எழுதுங்கள்!! இவர்கள் எண்ணம்
எள்ளளவும் கூடிவரக் கூடா தென்றே
நாடனைத்தும் தூற்றவேண்டும் இவர்தம் கூற்றை;
நமையழுத்தி இவர்வாழ முயற்சி யென்றே!

—(இரா. வெற்றியரசு)

# பல்லவர் தளபதி பரஞ்சோதி!

★

உங்களைப்போல் நான் நாத்தீகக் குடுக்கை இல்லை; எனக்குப் படைப்பித்தோன் உண்டு, சாதி உண்டு, மதம் உண்டு; சுருங்கச் சொன்னால் 'சாக்கடைச்சாத்திர' மென்று உங்கள் நாத்தீக நாவால் கூறும் அதன் சம்பந்தப்பட்ட யாவுமே உண்டு! பெரிய புராணம், கந்த புராணம் ஆகிய எல்லாமுமே என் சொந்தப்புராணங்கள் என்று கருதுபவன் நான்! புராணங்கள் தேன், நான் ஈ! போதுமா என்னைப்பற்றி?

நாயன்மார்களின் வரலாறு இன்ப (காம) ரசக்குழம்பு. சதா அதனை அனுபவித்த வண்ணந்தான் இருப்பேன். ஒரு நாள் புராணத்தில் திருத்தொண்ட நாயனார் என்று குறிப்பிடப்பட்டிருக்கும், பல்லவர்களின் வீரத்தளபதி பரஞ்சோதியடிகளைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. (பரஞ்சோதியை நான் பார்த்ததாக நம்பித்தான் நீங்கள் கதையைப்படிக்க வேண்டும்) நான், பல்லவர் தளபதி பரஞ்சோதியைக் கண்டதும் "வாருங்கள் வீரத்தளபதி! போர்க்களத்தில்—பெருக்கெடுத்து ஓடும் இரத்த ஆற்றில் நின்று, நின்று பண்பட்ட உங்கள் நெஞ்சு,பெற்ற பிள்ளையைக் கறி சமைக்கப் பக்குவப்பட்டதில் ஆச்சரியமில்லை; நாத்தீகம் பேசிப்பேசி நாத்தழும்பேறியவர் நம்புகிறார்களில்லை..." என்று பலவாறு கூறிப்புகழ்ந்தேன்.

"அட அய்யா! நாவன்னாக்கினா! போதும் நிறுத்து; எப்படிப்பட்ட நெஞ்சானாலும் பெற்ற பிள்ளையைக் கொல்ல எவனய்யா துணிவான்?" என்று பரஞ்சோதியடிகளார் என்புகழ்ச்சியை ஏற்றுக்கொள்ளாமல் கேள்வியைப் போட்டார், அணுகுண்டைப் போல! அவர் கேள்விக்குப் பதில் சொல்ல என்னால் முடியுமா? மௌனச் சாமியாய் நின்று கொண்டிருந்தேன். அவர் மேலுந்தொடர்ந்து "சேக்கிழார் பாடித்தொலைத்து விட்டார்; நடந்த கதை வேறு, சேக்கிழார் நடத்தியிருக்கும் கதை வேறு கதையில்சம்பந்தப்பட்டிருக்கும் பரஞ்சோதி வேறு, பல்லவர் தளபதிபரஞ்சோதி வேற; ஏதோ துண்டுதுக்கடாவாகக்கேட்டதைப் பாடி என் பெயரைச் சந்தி சிரிக்க வைத்துவிட்டார்! கதையைத்தான் சொல்லுகிறேன் கேளேன்......" என்று ஆரம்பித்தார். ஏதோ முக்கியமான விசயம் சொல்லப்போகிறார் என்று அவர் முகத்தை ஆவலுடன் நோக்கினேன். பல்லவர் தளபதி பரஞ்சோதி கதையை ஆரம்பித்தார்.

* *

ஓர் ஊரில் பரஞ்சோதி என்று ஒருவன் இருந்தான். அவன் கடவுட்பக்திமிகுந்தவனைப்போலவும், சிவனது அடியார்களிடத்தே மாறாத விசுவாசம் பேணுபவன் போலவும் வேடந்தாங்கி நடிப்பதில் கைகாரன். ஊர் மக்களால் 'சிவபக்தன்' என்று கொள்ளப்பட்டு வந்தான். அவனுக்கு மனையாளும் மகவும் அவனைப்போலவே வாய்த்தது அதிசயம் தான்! அவனின் உட்கருத்தையறியாத பலர் அவனைப் புகழ்ந்தனர். அது அவன் தாங்கி நடிக்கும் சிவவேடத்தை என்றும் நடிக்க உதவியது. இது காரணமாய் அவன் எந்த வேலையும் செய்வதில்லை. சோம்பேறியாய் வயிற்றினைப் பேணவகைகிடைத்தால் எவன்தான் உழைக்க எண்ணுவான்?

ஒரு சமயம் அவன் சோற்றுக்குத் திண்டாட வேண்டி வந்துவிட்டது. வழி என்னவென்று யோசித்துப் பல வழிகளில் முயன்றும் படுதோல்வியே பெற்றான். கடைசியில்தான் அவன் மூளையில் அவ்வழி தோன்றியது. 'அன்று முதல் சிவனடியார்கட்குச் சோறு படைப்பித்த பின்னர்த்தான் தானுண்ணுவது' என்று வெளியிற் கூறிக்கொண்டான். மதமும், சாதியும், பித்தலாட்டமும் தலை விரித்தாடிய அந்த நாளில் [ஏன் இந்த நாளில்தான் என்ன குறைச்சல்!] சோற்றுச் சுவாமிகட்குக் குறைவு என்ன? தெருவிற்கு நான்கு பிச்சைக்காரர்களாவது தூங்கிக் கொண்டிருப்பார்கள்!

பரஞ்சோதி முதலில் ஒரு தெருவில் உள்ள பிச்சைக்காரர்களிடம் தன் கைவரிசையைக் காட்டினான். முதலில் ஒரு பிச்சைக்காரனை அழைத்து வந்தான். 'என் வீட்டில் சுவாமிகள் அமுதுண்ண வேண்டும்' என்று மகிழ்ச்சியுடன் கூறுவதைப்போலக் கூறி வீட்டிற்குள் கூட்டி வந்து, அவன் (திரு) ஓட்டில் இருக்கும் சோற்றைப் பிடுங்கிக் கொண்டு, "இந்த ஊர்ப் பக்கம் தலையைக் காட்டினால் தலை உனக்கில்லை" என்று உதை, உதையென்று உதைத்து ஊரையேவிட்டு விரட்டி விட்டான்.

அவன் தாங்கியிருக்கும் சிவனடியார் வேடத்தில் சரியாய் வரும்படி கிடைக்கவில்லை; அதனால்தான் அவன் இந்தக் குறுக்கு வழியில் இறங்கினான். மேலும், அக்காலத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே புண்யவான்களாய் விளங்கியதால், பிச்சைக்காரர்களின் (திரு) ஓட்டில் சோறும் சற்று அதிகமாகவே இருக்கும். உடலை வதைக்காமல் உண்ண வேண்டுமளவு சோறு கிடைக்கும் பொழுது உழைத்துண்ண அவனென்ன 'நாமா'? விசயம் வெளியாகமலிருக்கத்தான் உதையும் கொடுத்து சுவாமிகளை ஊரைவிட்டே துரத்திவிடுகிறானே?

இப்படிச் சிலகாலம் நடந்து வந்தது. இதனால், ஊரில் சிவனடியார் கூட்டமும் வர, வரக் குறைந்து கொண்டே வந்து, கடைசியில் பிச்சைக்காரர்களை (சிவனடியார்களை) தேடிப்பிடிக்கும் அளவுக்குநிலைமை வந்துவிட்டது. ஒரு நாள் சிவனடியார் யாரையுமே காணவில்லை! (உதைத்து விரட்டினால் எவன் ஊரிலிருப்பான்?) பரஞ்சோதி, பிச்சைக்காரனை எங்கெங்கோ தேடியலைந்து கடைசியில் ஊருக்குப் புதிதாய் வந்துள்ள ஒருவனைக் கண்டு பிடித்தான்.

அவனைக் கண்டதும் பரஞ்சோதி வழக்கப்படி குழைந்து வீட்டிற்கு அழைத்துவந்தான். எப்போதும்போல் சுவாமிகளின் (திரு)வோட்டில் உள்ள சோற்றைப்பிடுங்கிக்கொண்டு, மனைவியின் ஒத்தாசையால் வாயில் துணி

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)




காட்சி 35.

[மில்லாபீஸ்]

உறுப்பினர்:-முதலியார், பியூன், வேவா, கணக்கப் பிள்ளை.

கதை அமைப்பு:-[வேவா பஞ்சாலை அலுவலகத்திற்குச் சென்று உளவறிகிறான்.]

பியூன்:-[உறங்கிவிழுந்துகொண்டிருக்கிறான்]

வேவா:-[மெதுவாக மானேஜர் அறைக்குள் நுழைகிறான்]

முதலியார்:-[ஏதோ பழங்கணக்குகளையும், பைல்களையும் வைத்து ஒத்துப்பார்த்துக் கொண்டிருக்கிறார்]

வேவா:-முதலியார்வாள்! வணக்கம்!!

முதலியார்:-[திடுக்கிட்டுச் சட்டென்று பைல்களை மூடிக்கொண்டே] யாரது? ஓ! நீங்களா!! வணக்கம், வணக்கம்......

பியூன்::[ஓடி வந்து, வேவாவை நோக்கி]-என்னாங்க சார்......... நீங்க பாட்டுக்குக் கேட்காமே கொள்ளாமே மளமளனு உள்ளே வந்துட்டீங்களே......? எசமான் என்னைப்பற்றி என்ன நினைச்சுக்க மாட்டாங்க? ஆங்?

முதலியார்:-[கோவமாக] தூங்கிக்கிட்டிருந்தேனு நினைச்சுக்கு வாங்க! ச்சீப் போடா கழுதை...! —நீங்க உக்காருங்க சார்! அவன் கிடக்கிறான்...! உம். உங்களை அன்று நம் வீட்டில் முதன் முதலாகச் சந்தித்த போது நீங்கள் யாரு என்றே எனக்குத் தெரியாமல் போய் விட்டது!

வேவா:-அதனாலேதானே! எனக்கு அவ்வளவு நல்ல மரியாதை கிடைத்தது......

முதலியார்:-மன்னிக்கவேணும்! அது ஏதோ...தெரியாத்தனமாக நடந்து விட்ட அசம்பாவிதம்!

வேவா:-சரி போனது போகட்டும்! பிறகு, என்னை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?

முதலியார்:-மறுநாள் நம்ம சப் இன்ஸ்பெக்டரிடம் பேசிக்கொண்டிருக்கும் போதுதான், நீங்கள் புதிதாக வந்திருக்கிற 'சி. அய். டி.' என்று தெரிய வந்தது! உம். இப்போது தங்களுக்கு இங்கு என்ன விசேஷமோ?

வேவா:-விசேஷம் ஒன்றுமில்லை...! தங்கள் மகள் விமலாவுக்கு...?

முதலியார்:-இன்னும் பைத்தியந்தெளிந்த பாடாய்க் காணோம்!

வேவா:-யாருக்கு...?

முதலியார்:-விமலாவைத்தானே கேட்டீர்களிப்போ?

வேவா:- ஆமாமாம்! அதுக்கு ஏதாவது வைத்தியம் செய்து பார்க்கப்படாதோ?

முதலியார்:-பைத்தியத்திற்கென்னசார்! வைத்தியம் பார்க்கிறது? வியாதியாயிருந்தாலாவது! இன்ன வியாதிக்கு இன்னமருந்துனு வைத்தியர் பார்த்துக்கொடுப்பார்! இந்தப் பைத்தியத்திற்கு... எந்த வைத்தியர் வந்து என்னா மருந்தைக் கொடுக்கப்போறார் சார்?

வேவா:-என்ன சார்! நீங்களே இப்படிக் கை விட்டு விட்டால், பிறகு விமலாவின் கதி என்னாகிறது?

முதலியார்:-அது தலை விதிக்கு ...நாமென்ன செய்ய முடியும்?

வேவா:-ஒரு வேளை! ராஜன் விடுதலையானால், விமலாவின் பைத்தியம் தீராதோ...?

முதலியார்:-உங்கள் கேள்வி மிகவும் விசித்திரமாயிருக்கிறதே?

வேவா:-அதெப்படி விசித்திரமாகும்?

முதலியார்:-என்ன சார்! விமலாவுக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்தவனே ராஜனல்லவா...?

வேவா:-இல்லேசார்...!

முதலியார்:-என்ன! நொள்ளே சார்...! வேறே யாரு...?

வேவா:-விமலாவின் தலைவிதியை எழுதினானே...! அந்த ஆண்டவன் சார்!

முதலியார்:-ஏது! நீங்கள் ஒரு நாஸ்திகவாதியா யிருப்பீர்கள் போலிருக்கே...?

வேவா:-சமயத்திற்குத் தகுந்தபடி பேச்சை மாற்றிக்கொள்ளும் நீங்களா? நானா?

முதலியார்:-என்ன சார்! ஊரிலே, உலகத்திலே எல்லோரும் சொல்லுவாங்களே...! 'தலைவிதி தலைவிதி...' என்று அதைப் போல், நானும் ஒரு பேச்சுக்குச் சொன்னால், நீங்கள் அதை எல்லாம் ஒரு பேச்சாக வைத்துப் பேசலாமா?

வேவா:- ஒரு பேச்சாக வைத்துப் பேசக்கூடாததை எல்லாம் முதலில் நீங்கள் பேசலாமோ...?

முதலியார்:- காலங்கெட்டுப் போயிருக்குதல்லவா? நீங்கள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம்! சரி. நீங்களே சொல்லுங்கள்; விஸ்வனை ராஜன் சுட்டுக்கொன்றிருக்காவிட்டால், விமலாவுக்குப் பைத்தியம் பிடித்திருக்குமா?

வேவா:- விஸ்வனைராஜன்தான் சுட்டிருப்பானென்று நீங்கள் நம்புகிறீர்களா?

முதலியார்:- நம்பாமல் என்ன செய்வது? விஸ்வனுக்கு வேறு யாருமே பகைவனில்லையே...?

வேவா:- விஸ்வனுக்கு ராஜன் பகைவனா? எப்படி?

முதலியார்:- ராஜன் விமலாவுடன் கல்லூரியில் படிக்கும் போது ஒருவரை யொருவர் மிகவும் நேசித்

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

# மண நினைவு!

போட்டி

எண் 10.

அவள் மண்ணரசனின் மடியில் தவழ்ந்து, மழலை மொழியால் மன்னவனுக்கு மகிழ்வூட்டிய மங்கை! மாடமாளிகையிலே மனம் சிறிதும் கவன்று விடாதபடி காக்க, கன்னித் தோழிகள் பலர் அவளுக்கு உண்டு!

குலவுகின்ற நிலவொளியிலே குதிக்கின்ற உள்ளத்தைக் கட்டுப்படுத்த, அம்மானை ஊசல் ஆடுதல் உண்டு—தன் அருந் தோழிகளுடன்...

சிறிது வேதனையை அவள் உள்ளம் அடைந்ததாகக் கண்டாலும் கூட அரண்மனை அனைத்தும் அகம் குவிந்த நிலையில் அவலமுறும்—அவள் உள்ளம் மலரும்வரை!

சீரும் சிறப்பும் வளரும் வாணிபமும் அமைந்த நாட்டையாளும் மன்னனின் மகளுக்கு அவனைக் கண்டதிலிருந்து—அவன் கற்பனைக் கனியை சுவைத்ததிலிருந்து, அவன் ஈந்த பண்ணமுதை பருகியதிலிருந்து உள்ளத்திலே குமுறுகின்றது ஒரு உணர்ச்சி!

* *

அவன் கவிஞன்; கற்பனைக் கடலிலே கருத்து முத்துக்களை எடுத்து வந்து மக்களுக்கு பிரதியுபகாரம் கருதாது தரும் கவிஞன்...

பைந்தமிழின் சுவையைப்பாடலிலே தேக்கி, கற்பனைக் கருத்துகளைக் கவிதையிலே ஏற்றி சிந்தனைக்கு சீரிய விருந்தளிக்கும் சிற்பி...

கண்டான் அவளை—அரசனிடம் தன் அருந் தமிழ்த் திறத்தினை எடுத்துக் காட்ட சென்றிருந்தபொழுது!

அவளைக் கண்டதிலிருந்து காவியத்தில் பதிய வேண்டிய உள்ளம், அக்கன்னியின் கனிஇதழைச் சுற்றிச் சுற்றி அலைந்தது. பைந்தமிழ்ச் சுவையிலே படிய வேண்டிய உள்ளம் பாவையின் உருவினை நோக்கித் திரும்பியது.

பாவெல்லாம் பாவையானாள்; கவிதையெல்லாம் கன்னியானாள்...

* *

மனங் கவரும் வண்ணத்துடன் மலர்ந்த மலர்கள் செறிந்து, கண்ணுக்குக் காட்சியும் கருத்துக்கு நன்மணமும் ஈந்து பொலியும் பூங்கா.

அன்னையின் மடியில் தவழ்ந்து மழலை மொழி பொழியும் குழவியின உருப்போல, நீலவானிடையே கோலமேகத்திடைத் தவழ்ந்துவரும் வெண்ணிலவின் தண்ணொளியால், உவகையுற்று உலகிலுள்ள காதலரனைவர் உள்ளத்திலும் கொப்பளிக்கிறது,

பொதிகையினின்று வீசுகின்ற தென்றலின் சந்தன மணம், பூங்காவில் இரவில் மலர்ந்த வெள்ளிகளைப்போல் அலர்ந்து, தென்றலின் தழுவலால் துடிக்கும் மலர் மணத்துடன் அள்ளித் தெளிக்கப்படுகிறது—அகத்திலே வெறியூட்டும் வகையிலே!

அன்பின் பிணைப்பிலே, ஆசையின் நேசத்திலே, காதலின் கருத்திலே, வேட்கையின் வெறியிலே உலகம் ஆழ்ந்துகிடக்கிறது.

பூங்காவில், அடர்ந்த மரங்களிலே நிலவொளியில் நீராடும் பச்சைக் கிளிகளின் காதற் சொற்கள் காற்றில் மிதக்கின்றன. எங்கோ சிட்டிரண்டுசேர்ந்து சிரிக்கின்றன...அன்பு பொழியும் அந்நிலவொளியில் மரத்திடையே 'ஓடிப் பிடித்து' இரு அணில்கள் விளையாடுகின்றன...

'வருகிறேன் என்று சொல்லிய காதலி இன்னும் வரவில்லையே' என்ற ஏக்கத்தை உள்ளத்தில் தேக்கி, நலிந்த நிலையிலே வாடுகிறான் பண்ணரசன்!

அவன் கருத்திலே சூழ்நிலைக் காட்சிகள் கவர்ச்சியை உண்டு பண்ணுகின்றன!

இனிய மணமும் எழிற் காட்சியும் இதயத்தே நீந்துகின்ற வேளையில், அவன் உள்ளம், மண்ணரசன் மகள், தன்னை—ஓர் பண்பாடும் பாவலனை—கன்னித் தமிழுக்கு அணிசெய்யும் கவிஞனை—வறுமையில் வாடிவதங்கும் ஒருவனைக் காதலித்த தன்மையை எண்ணிப்பார்க்கிறான்.

செல்வ—வாழ்வை செதுக்கிவிட்டு, 'உயர் குடிப்பிறந்தோம்' என்ற நினைவை நீத்து விட்டு, தன்னைக் காதலனாக ஏற்ற கன்னியின் உளப்பான்மை அவன் உளத்தினிலேஇயைந்தது!

அவன் சிந்தனையில் முதல் இரவிலே—களவொழுக்கம் கொண்டு முதல் இரவில் சந்தித்த காட்சி சுழன்றது...

* *

பூங்கா...முழுநிலவு...தென்றல்...

பூங்கா மத்தியில் அமைக்கப்பெற்ற பளிங்காசனத்திலே பாவை...இளமையின் வனப்பு, அழகின் எல்லை இரண்டும் இணைந்து இயற்றப்பெற்ற கவிதைதான் கன்னியின் வடிவம்.

கன்னியைக் கண்ட கவிஞன் உள்ளத்தில் கற்பனைகள்கொந்தளித்தன-காட்டாற்றின் வெள்ளத்தைப்போல!

கனியைப் பிழிந்தெடுத்ததுபோல பைந்தமிழ்ச் சுவையைப் பாவிலே தேக்கிய பாவலன்—பாவையைக் கண்டதும் யாது பேசுவது எனத்தெரியாத நிலையிலே திகைத்தான்...தெவிட்டாத அவள் தேனிதழ்கள் நிலவொளியில் துடித்தன...மண்ணை நோக்கிய மண்ணரசன் பெண்ணின் கண்கள் மீண்டன......பண்ணரசன் கண்களில் இணைந்தது...கவிதையிலே ஒரு ஏடு திருப்பப் பெற்றது...

"அரசி..."

"அரசியா...அது யார்...நம் இருவரைத் தவிர இந்த யாரும் இருப்பதாகத் தெரியவில்லையே"—உதட்டிலே புன்னகை மின்னியது—ஒலியோ யாழே தான்!

"தாங்கள்"...

"தாங்களா...நீ என்று சொல்லுங்கள்...நான் ஒரு பெண்...தங்கள் பண்ணுக்கு அடிமையான பாவை...கற்பனையின் திறத்திலே கருத்தை இழந்த கன்னி..." குழலோசை போலக் கொப்பளித்தது உணர்ச்சியுடன் அவள் குரல்!

"மாநிலம் ஆளும் மன்னவன் மங்கை, வறுமையால் வாடும் பாவலனின்......" அவன் குரலில் ஏக்கமும் அச்சமும் கலந்திருந்தது......

"ஆம்! என் தந்தை மண்ணரசன்...தாங்கள் பண்ணரசன்... இருவரும் அரசர்கள்தானே... அதோ பார்த்தீர்களா... இரு மான்களையும்..."

இரு உள்ளங்கள் நெருங்கின......பின் உடல்கள் நெருங்கின... இதழ்கள் நெருங்கின... பொருந்தின... எல்லாம் ஒன்றாயின... மரத்தோடு மர

(தொடர்ச்சி 1[illegible]ம் பக்கம்)

## தோழர்களே!

3ம் பருவத்தில்

10-வது கதை இது!

இன்னும் 5 கதைகள்

தொடர்ந்து வெளிவரும்!

☆

எல்லாவற்றையும்

படித்து வையுங்கள்!

பின் தீர்ப்புக் கூறுங்கள்!

# திருக்குறள் அறிவு

II.

(சென்றவாரத் தொடர்ச்சி)

**இயற்கை அறிவு.**

இத்தகைய அறிவைப் பொதுவாக மூன்றுவகையாகப் பிரிக்கலாம். ஒன்று இயற்கை அறிவு. உலகில் சிறிதும் அறிவற்ற மனிதனே ஏன்—உயிரே கிடையாது எனலாம். ஓர் அறிவு, ஈர் அறிவு என்று ஆறறிவுக்கு உட்பட்ட உயிர்களைத் தொல்காப்பியர் பிரித்துக்காட்டி இருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக ஆறாவது பகுத்தறிவையுடைய மனிதனை தமிழ் இலக்கணம் "உயர்திணை" என்று கூறுகிறது. இந்த மனிதனுக்குரிய இயற்கையான அறிவும் எங்கிருந்தோ 'தொப்' பென்று குதித்துவிடவில்லை. மனிதன் தோன்றி வளர்ந்தகாலம் முதற்கொண்டு அவ்வறிவு பரம்பரையாகப் பெற்றோர்வழியே பிள்ளைகளுக்காகி வந்திருக்கிறது. வருகிறது, வரும். இந்த அறிவு இரத்தத்திலே ஊறியது, எளிதில் மாறாது. எவ்வளவு நூல்களைப் படிப்பினும் உலகுடன் பழகினும் உண்மை அறிவு வளர்ந்து, சிறப்புற்றுப், பண்படினும்,—மாறாது! "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்." சில மனிதர்கள், மலர்ந்தும் மணம் தரா மலர்களைப்போல, கற்றும் பயன்படாதவர்களாக வாழ்கிறார்களே அதன் காரணம் இதுதான்!

**கல்வியறிவு.**

இனி இரண்டாவது அறிவு கல்விஅறிவு எனப்படும். இதைச் செயற்கை அறிவென்றும், நூலறிவென்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். நம் இயற்கை அறிவை வளரச்செய்யும் கருவியேயாகும் இக்கல்வி அறிவு என்பது. இயற்கை அறிவு மண்ணுள் கிடக்கும் கழுவாத மாணிக்கம். செயற்கை—கல்வி அறிவு அம்மாணிக்கத்தை வெளியில் எடுத்துக்கழுவி, மெருகூட்டி அழகாக்கி, ஒளியூட்டுகிறது. குடத்துள் வைத்த விளக்காகிய இயற்கை அறிவைக் குன்றின் மேலிட்ட விளக்காக்குவது செயற்கை அறிவு. மணலாகிய நிலத்திலே கல்வி என்ற கருவி கொண்டு கல்லிக்,கல்லித் தோண்டத், தோண்ட அதிலுள்ள இயற்கை அறிவு ஊற்றெடுத்து வெள்ளமாகப் பெருகிவிடுகிறது. 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' மணலில் தோண்டும் கேணி தோண்டிய அளவுக்கு நீர் ஊறும். எவ்வளவு ஆழம் தோண்டுகிறோமோ அவ்வளவுக்கு நீர் பெருகும். அதுபோல 'மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு,' என்கிறார் குறளாசிரியர்.

இக்கல்வியறிவை இரண்டு வகையாக அடையலாம். ஒன்று தான் கற்றலின் மூலம், இன்னொன்று கற்றார் வாய்க்கேட்டலின் மூலம்.

## "அண்ணல்"

'கற்றிலனாயினும் கேட்க!' என்று வள்ளுவர் கட்டளை இடுகிறார். கல்வியின் அவசியத்தைப் பல குறள்களில் வள்ளுவர் வகுத்துரைக்கின்றார். அவற்றைக் 'கல்வி' 'கல்லாமை' என்ற இரண்டு அதிகாரங்களாக உரைஆசிரியர்கள் பிரித்துள்ளனர் என்றால், இக்கல்வியறிவின் இன்றியமையாமை எவ்வளவு என்று தெரிகிறதல்லவா! "மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன்னிற்பவை" என்று கேட்கிறார்.

கல்வி கேடற்ற செல்வம். கல்வி கற்காதவர் கண்ணில்லாத குருடர்கள். அவர்களுக்கும் விலங்குக்கும் வேறுபாடு இல்லை. படித்தவர்க்கு எல்லாநாடும், எல்லாஊரும் தம் நாடாய்த், தம்மூராய் இருக்கும். எனவே "யாதனையும் கல்" என்று நமக்கு அறிவுரை கூறுகிறார். நாட்டை ஆளும் அமைச்சர்களுக்கு இக்கல்வியறிவு இன்றியமையாதது என்று வள்ளுவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அத்தகைய கல்வியைக் கற்கும் முறையையும் வள்ளுவர் கூறுகிறார். காலத்திற்கும், கருத்துக்கும் ஏற்றவற்றை, வேண்டியவற்றைக் கற்கவேண்டும். ஐயம், திரிபு இல்லாமல் கற்கவேண்டும். கற்று, அதன்படி வாழ்விலும் நடக்க வேண்டும். இவ்வாறு கற்று அதன்படி நடக்கவேண்டும் என்பவர், முன்பு 'கற்றதால் ஆயபயன்' அறிவைப் போற்றி வணங்குவதுதான்" என்று கூறியதன் பொருள் என்ன? கல்வி கற்று, நம் இயற்கை அறிவை வளர்த்துச் செப்பனிட்டு, அதுகாட்டும் வழியில் நடப்பதுதான் அறிவுக்கு நாம் செய்யும் வழிபாடு ஆகும் என்றாகிறதல்லவா! இத்துடன் கற்றார்வாய்க் கேட்பதும் அறிவை வளர்க்கும் வழியாம். மேலும் கேட்பது, கற்றலைவிட மனதில் நன்கு பதிந்த பயன் தரும்—எனவே தான் கல்வியைக் "கேடில் விழுச்செல்வம்" என்று கூறியவர், கேள்வியை 'செல்வத்துட் செல்வம்' என்று கூறுகிறார்.

**உலக அறிவு.**

மூன்றாவதாக உலக அறிவு இன்றியமையாததாகிறது. முன்னைய இரண்டும் அடிப்படையே. நம் இயற்கை அறிவும், நூலறிவும் உலகில் வாழ நமக்குப் பயன்பட வேண்டும் என்றால், நாம் உலகியலை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். எவ்வளவு கற்றவனாயினும் உலகியல்புக்கேற்பத்தான் நடந்து கொள்ள வேண்டும். அதற்குத் தான் படித்த நூல்களும், இயற்கையான அறிவும் இடங்கொடாவிட்டால் அதற்காகப் பழைய முறையிலேயே காலத்திற்கும், கருத்திற்கும் ஒவ்வாத வகையில் கிடந்து உழலக் கூடாது. இன்றைய உலகம் எத்தகையது, எவ்வாறு மாறிக் கொண்டு வருகிறது என்பதை அறிந்து நடக்க வேண்டும். பழுத்தும் பயன் தராத மரம் போல, படித்தும் உலகிற்குப் பயன்படாமல் இருக்கக் கூடாது. 'அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பிலாதவர்' என்கிறார் வள்ளுவர். மக்கட் பண்பு என்பது என்ன? தனிமரம் தோப்பாக முடியுமா? எனவே உலக இயல்பை அறிந்து நடப்பது தான் அது. 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்' எதை எதை எவ்வளவு கற்றிருந்தாலும், உலகைக் கண்டு பழகி, அறிந்து நடப்பதுதான் வாழப் பயன்படும். நூலறிவு கற்

ரோஜா முத்தையா

# என்ன செய்வார்கள்!

★

ஒருகாங்கரஸ் திராவிடர்:— நம்ப காமராஜரும் சுப்பராயனும் இங்கே தானிருக்கிறார்களா? வேறு எங்கேயும் போய் விட்டார்களா?

மற்றொரு கா. திராவிடர்:— ஏன்! உனக்கு இந்தச் சந்தேகம்?

ஒ. கா. தி:— இல்லை, மந்திரிகள் இந்த மடசம்பந்தமான மசோதாவைக் கொண்டு வந்த பிறகு, பார்ப்பனர்கள் எல்லாம் சிண்டை முடிஞ்சு கொண்டு பாய்ஞ்சு பார்த்து, என்னென்னமோ வேஷம் போட்டெல்லாம் பார்க்கிறார்கள். மந்திரிகளும் மற்ற எம். எல். ஏக்களும், பார்ப்பனர்கள் எதிர்க்கிறது வடிகட்டின வஞ்சகம் என்றெல்லாம் விளாசு விளாசு என அடித்துப் பேசுகிறார்கள்! இந்தச் சமயத்தில் இவர்கள் ஏன் முக்காடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று தான் கேட்கிறேன்.

ம. கா. தி:— ஓ! ஓ! நீ காமராஜர் கோஷ்டியோ. கேளப்பா கேளு! பார்ப்பனப் பெண்கள்—பார்ப்பன ஆண்கள் தயவில்தான் வாழ வேண்டும் என்று முடிவு கட்டிவிட்ட இவர்கள் பார்ப்பனர்களுக்கு விரோதமாக எப்படிப் பேசுவார்கள்? மடங்கோயில் மசோதா மடத்தனமானது, தேவையில்லை என்று கூறுவதாயிருந்தால் அவர்கள் மக்கள் முகத்திலேயே பின்னால் முழிக்க முடியாது? ஏனென்றால் எவனெவன் இந்த மசோதாவை எதிர்க்கிறானோ அவனெல்லாம் ஒண்ணாம் நம்பர் துரோகி என்கிற நிலை வந்து விட்டது! அந்த மாதிரி செய்து விட்டார்கள் இந்தத் திராவிடக்கழகத்தார்கள்! முக்காட்டுக்குள் நுழையாமல் வேறு என்ன செய்வார்கள்?

---

ப்னை கலந்தது, மெருகூட்டப் பெற்றது. உலக அறிவே வாழும் வாழ்வு. முன்னது எட்டிச் சுரைக்காய். பின்னதே கறிக்கு உதவுவது! "எவ்வதுறைவதறிவு, உலகத்தோடு அவ்வதுறைவதறிவு''. என்பதும் குறள்.

இன்னும், 'உலகந்தழீஇய தொட்பம்'—உலகை அறிந்து நடப்பதே நுண்ணிய அறிவு. அந்த அறிவு நண்பர் உறவினர் முதலியவர்களிடம் முன் மகிழ்ந்தும், பின் கடிந்தும் மாறக்கூடாது. செல்வம் வந்தபோது ஒருமாதிரியும், வறுமை வரும்போது ஒரு மாதிரியும் மாறக்கூடாது. நிலையாய், உறுதியாய் இருக்க வேண்டும். 'மலர்தலும் கூம்பலும்' மலருக்கு இயற்கையாக இருக்கலாம். ஆனால் 'அறிவு'க்கு அது கூடாது. உலகுடன் என்றும். ஒரே நிலையில் பழக வேண்டும். கல்வி அறிவில்லாதவனை குருடன், விலங்கு என்று கூறிய அதே வள்ளுவர்,- உலக அறிவில்லாதவனைச் 'செத்தபிணம்' என்கிறார். 'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்'.

இனி, கல்வி அறிவு மட்டும் போதாதா? அதுதான் ஒப்பற்ற சிறப்புத்தரும் செல்வமாயிற்றே! என்றால் அதுவும் வேண்டியதுதான், இருந்தாலும் "செயற்கை அறிந்தக் கடைத்தும்...என்கிறார். 'உலகத்தியற்கை அறிந்து செயல்' வேண்டும் என்றே வற்புறுத்துகிறார். உலக அறிவை அறியவே, அந்த நுண்ணிய நூல்அறிவைப் பயன் படுத்தவேண்டும். ஏன் எனில் நாம் கற்பவை யாவும் நமக்குப் பயன்படுவன என்று கூறமுடியாது. அதனால்தான் முன்பு கற்பவை கற்க! என்றும், அதன்படி நட என்றும் கட்டளையிட்டவர், எங்கே இவன் கற்றதென்று கூறி வேண்டாதனவற்றையும் விடாது இருந்துவிடப் போகிறானோ என்று, உலகத்தியற்கையையும் அறிந்தே நடக்கவேண்டும் என்று இக்குறளில் கூறியுள்ளார்.

குறிப்பறிதல்.

இனி, இம்மூன்றுக்கும் மேலாக ஒரு அறிவு இருக்கிறது. அது இத்துடன் வைத்து எண்ணக்கூடியதல்ல. தனிப்பட்ட சிறப்புடையது. பிறர் கூறாமலே, குறிப்பாலே அவர் உள்ளத்தை அறியவேண்டும். அவ்வறிவுடையவன் உலகிற்கே ஒரு அணிகலன் ஆவான். "கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும் மாறாநீர் வையக்கணி'' அது மட்டுமல்ல, அவனைக் கண்கண்ட 'தெய்வம்' என்கிறார்! குறிப்புணர்வாரின் நட்பு இன்றியமையாதது என்றும் கூறுகிறார். முகமும், கண்ணுமே உள்ளத்தைக்காட்டும் கண்ணாடிகள். அவற்றைக்கொண்டு எவர்மனத்தையும் அறிந்து கொண்டு விடுவது யாருக்கும் எளிதில் முடியக்கூடியதல்ல. அது சிறப்பான இயல்பு. அக்குறிப்பறிவு இருந்தால் "அவையறிதல்'' எளிமையாகும். அவையறிந்து பேசுபவன் உலகை ஆட்டிப்படைப்பவன் ஆகலாம். இன்னும் வலியறிதல், இடமறிதல், காலமறிதல் முதலியனவும் முக்கியம் என்பதையும் வள்ளுவர் தனித்தனியே வற்புறுத்திக்கூறுகின்றார். இவ்வாறு அறிவை அளவிடப் புகின் அது மிகவும் பரந்ததாய் இருக்கிறது; அதுமட்டுமின்றி எல்லையற்றதாகவும் இருக்கிறது!

அறிவின் எல்லை!

கடவுளைப் பற்றிச் சமயவாதிகள் கூறும் கருத்துக்களையெல்லாம், அறிவுடன்பொருத்திப்பார்த்தால் "அறிவே கடவுளென்றும், அறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால் அறிவை வளர்த்து அதன்படி அன்பு வழியில் நடந்து அறம் வளர்த்து வாழ்வதே கடவுளுக்குச் செய்யும் தொண்டு, வழிபாடு என்றும் தெரிகிறது. இத்தகைய தொண்டைச் செய்தால் நாம் அறிவாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடலாம். எப்படி?'' வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்றுதான் வள்ளுவரே கூறுகின்றாரே!

மனிதனிடம் எப்பொழுதும் அறியாமை இருக்கிறது. காரணம் அவன் எவ்வளவு பரந்த அறிவுடையவனாயினும் "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு'' என்ற நிலையிலேயே இருக்கிறான். அறிவு அவ்வளவு அகன்றதும் எல்லையற்றதுமாகும். "அரிய கற்று ஆசற்றார் கண்ணும்தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு'' என்பது குறள். இத்தகைய-

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# தோழர் மாஸேடங்!

அனேக வருஷங்களுக்கு முன், ஒரு நாள் மாலை! பல விருந்தினர்களின் முன்னிலையில் ஒரு குடியானவக் கிழவன் கோபாவேசத்துடன், தன் 13 வயதுப் பையனை வாயில் வந்தபடியெல்லாம் "சோம்பேறிக்கழுதை! உதவாக்கரைப் பயலே!" என்று வைது கொண்டிருந்தான்.

அந்தச் சிறுவனின் பெயர் மாஸேடங். 43 வருஷங்கள் கழித்து, அதாவது, இன்று, அந்தச் சிறுவனின் காலடியில், சியாங்கேய் ஷேக் ஸ்தாபித்த சீன அரசாங்கம் மண்டியிட்டுக் கிடக்கிறது.

தந்தைக்குக் கோபமூட்டிய மாஸேடங் செய்த காரியம் இதுதான். ஆட்டத்திலும் ஓட்டத்திலும் நேரத்தைச் செலவழிக்க வேண்டிய இளம் பருவத்திலேயே, நாட்டின் பொருளாதார நிலைமையைப் பற்றியும், முன்னேற்ற வழிகளைப் பற்றியும் அவர் மனம் சிந்திக்கத் தொடங்கிற்று. தனக்கு வேண்டிய விவரங்களைப் பள்ளிக்கூடத்தில் ஒருவரும் சொல்லிக் கொடுக்காததைக் கவனித்ததும், பள்ளிக்குப் போகாமல் வீட்டிலிருந்து கொண்டு நல்ல புத்தகங்களைப்படித்துப்பெரியமேதாவியாகி விடலாம் என்று எண்ணம் பிறந்தது, இவர் சரியாகப் பள்ளிக்கு வராததைக் கவனித்த தலைமை ஆசிரியர் கோபித்துக் கொண்டார். "என்னுடைய சொந்தக் கல்வித் திட்டத்திற்கு அதனால் பிரதிகூலம் ஏற்பட்டாலும் பரவாயில்லை; நான் பள்ளிக்கு ஒழுங்காக வருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை—" என்று கேட்டுக் கொண்டார் மாஸேடங். "அது என்னடா அப்பா நிபந்தனை?" என்று வினவினார் பள்ளித் தலைவர். "நான் ஏதாவது கேள்வி கேட்டு, அதற்கு என் உபாத்தியாயரால் பதில் கூறத் தெரியவில்லையென்றால் நீங்கள் அவரைத் துரத்தி விடுகிறீர்களா?" என்று பையன் ஒரு போடுபோட்டான். தலைமை ஆசிரியர், வாயை மூடிக் கொண்டு பேசாமலிருந்துவிட்டார்.

வீட்டிலிருந்து கொண்டு புத்தகம் படித்ததால் மாஸேடங்கின் அறிவுத் தாகம் தீர்ந்தபாடாயில்லை. வரிசையாக, போலீஸ் பள்ளிக்கூடம், ஸோப்செய்யக் கற்றுக்கொடுக்குமிடம், சட்டக் கல்லூரி, தொழில் முறைக் கல்விச் சாலை, பொருளாதாரப் பள்ளிக்கூடம் இவற்றில் கல்வி பயின்றார். செய்தித் தாள்களில் விளம்பரம் பண்ணி, தன்னைப்போல் அறிவுப் பசிகொண்டு அலையும் மாணவர்களை அழைத்து அவர்களுடன் விவாதங்கள் நடத்தினார்.

1917-ம் வருஷம் வந்தது. ருஷ்ய நாட்டில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து பழைய பொருளாதார முறையை அடித்துக்கொண்டு போய்விட்டது. சீனாவைச் சீர்திருத்த வேண்டுமென்று துடித்த மாஸேடங் போன்ற வாலிபர்களுக்கும் அது ஒரு வழிகாண்பித்துச் சென்றது.

நான்கு வருஷம் கழித்துச் சீனாவில் கம்யூனிஸ்டு கட்சி ஸ்தாபிக்கப்பட்டபோது, மாஸேடங் அதில் சேர்ந்து ஆனமட்டும் அதைப் பலப்படுத்த முற்பட்டார்.

அலுப்பு சலிப்பின்றி, குடியானவர்களைத் திரட்டுவதில் அவர் தம் நேரம் முழுவதையும் செலவிட்டார். ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பதவி லீலீஸான் என்பவருக்கு அளிக்கப்பட்டது. மாஸேடங்கினுடைய கொள்கைக்கும் லீலீஸானுடைய கொள்கைக்கும் வேறுபாடு உண்டு. கம்யூனிஸத்தின் தாத்பரியத்தைக் கல்வியறிவற்ற குடியானவர்களால் புரிந்துகொள்ள இயலாதென்றும், நகரத் தொழிலாளர்களால்தான் வெற்றிபெற முடியுமென்றும் லீலீஸான் நம்பினார். ஆனால் மாஸேடங் குடியானவர்களின் திறமையில் பூரண நம்பிக்கை வைத்திருந்தார்.

காலம், மாஸேடங் நினைத்ததே சரியென்று நிரூபித்தது. தன்னுடைய நகரத் தொழிலாளரின் ஆதரவைக்கொண்டு லீலீஸான் பன்முறை அரசாங்கத்தோடு மோதிப் பார்த்தார். மண்டைகள் உடைந்தனவே தவிரப் பயன் ஏதும் ஏற்படவில்லை. உடனே மாஸ்கோவிலிருந்து உத்தரவு வந்தது. லீலீஸான தலைமைப் பதவியினின்று நீக்கப்பட்டார். கட்சியின் கிரீடம் மாஸேடங்கை நாடி வந்தது.

பெரும் சேதமுற்றிருந்த கம்யூனிஸ்டு கட்சியினரை அழைத்துக் கொண்டு, மாஸேடங் தென் சீனாவிலிருந்த மலைப் பிரதேசத்திற்குச் சென்று குடியேறினார். அங்கு ஒரு குட்டிக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது.

தென் சீனாவில் உணவுக் கஷ்டம் வெகு கொடுமையாகவிருந்தது. துருப்புகள் கூழைக் குடித்துக் காலத்தைக் கடத்த வேண்டியிருந்தது. சியாங்கேய் ஷேக்கின் துருப்புகள் வேறு இடையறாது துன்பம் விளைவித்துக் கொண்டிருந்தன. அரசாங்க ராணுவத்தோடு அடிக்கடி போர்கள் நடைபெறும். ஒரு சமயம் மாஸேடங் யுத்த களத்திற்குச் சென்றிருந்தாராம். எதிரிகளின் துப்பாக்கிகளினின்று கிளம்பிய குண்டுகளைப் பார்த்து, "அடே! இந்தத் தோட்டாக்களுக்கு என்ன தைரியம்! மாஸேடங் வந்திருக்கிறேன் என்று அவற்றிற்குத் தெரியாது போலும்"! என்று கூறினாராம்.

இனியும் தென் சீனாவில் அடைபட்டுக் கிடந்தால் கதிமோட்சம் கிடையாதென்று உணர்ந்து, மாஸேடங்கும் தளபதி சூடேயும் 80,000 வீரர்களுடன் சீனாவின் வடமேற்கு பாகத்திற்குப் பிரயாணமானார்கள். குறித்த இடத்தை அடைவதற்குள் வருஷம் ஒன்று ஆகிவிட்டது. 6,000 மைல் நடந்து 18 மலைத் தொடர்களையும், 24 நதிகளையும் கடந்து செல்வதற்குள், கம்யூனிஸ்டுத் துருப்புகளில் பெரும் பகுதி அழிந்துவிட்டது. உயிருடன் போய்ச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 20,000. அதாவது, 60,000 பேர் வழியில் உயிரிழந்துவிட்டார்கள்.

தாம் இழந்த பலத்தைத் திரும்பப் பெறுவதற்கு களைப்புற்ற கம்யூனிஸ்டுகளுக்கு ஓய்வு தேவையிருந்தது. அந்த ஓய்வை சீன—ஜப்பானியப் போர் அளித்தது. மாஸேடங்கைத் தவிடு பொடியாக்கத் திட்டம் வகுத்திருந்த சியாங்கின் கவனமெல்லாம் ஜப்பானி

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

## திராவிட கழக மத்திய நிர்வாக கமிட்டிக் கூட்டம்.

[*]

**20—2—49-ம்** தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணி அளவில் திருச்சியில் திராவிட கழக நிர்வாகக் கமிட்டி அவசரக் கூட்டம் ஒன்று நடைபெறும். கழக நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் அருள்கூர்ந்து அவசியம் வந்தருள வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

விஷயம்:—கழகச் செயல் நடப்பு முதலிய விஷயங்கள் பற்றி யோசித்தல்.

தி. பொ. வேதாசலம்.
தி. க. நி. கமிட்டித் தலைவர்.

குறிப்பு:—கூட்டம் திருச்சி தென்னூர் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.


# குடி அரசு

19—2—49 சனிக்கிழமை.


## உரிமையும் பொறுப்பும்.

இன்று நம் நாட்டில், எங்கு பார்த்தாலும் பஞ்சம், பட்டினி என்கிற முழக்கம் வளர்ந்து கொண்டே வருகிறது. இதைத் தொடர்ந்து மக்கள் சமுதாயத்திலே நாணயக்குறைவும் யோக்கியக்கேடும் மலிந்து விட்டன. 'சுதந்தரம் பெற்றோம்' என்று சொல்லிக்கொள்ளத் தலைப்பட்ட பிறகு, ஒருவரை ஒருவர் எப்படி ஏமாற்றுவது? எந்த மாதிரியான வேஷம் போட்டால் எப்படியெல்லாம் சுரண்ட முடியும்? என்கிற போக்கும், எந்த அயோக்கிய வேலைகளையும் செய்யலாம் என்கிற துணிச்சலும் பொதுவாகச் சமுதாயத்தில் வலுவாக வளர்ந்திருக்கின்றன. சட்டங்களுக்கு ஒரு மதிப்போ, சமுதாய ஒழுங்குக்கு ஒரு மரியாதையோ இன்று நம் நாட்டில் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

சமுதாயத்தின் உட்புறத்தில் உள்ள இந்த ஊழல்களின் வாடையே வெளிப்புறத்தில் களவு, கொலை என்கிற பெயரால் வீசுகிறது. இப்போது சமீப காலமாய்த் தமிழ் நாடெங்கும் நடந்து கொண்டு வரும் களவுகளையும், கொலைகளையும் கணக்கிட்டுக் கூட்டினால் எந்தத் திராவிடனும் வேதனைபடையாமல் இருக்க முடியாது. விசித்திரமான திருட்டுகள்! விதவிதமான கொலைகள்!

அரியாமையை நிலை நிறுத்தி வைத்து அதை அழகு பார்த்து வரும் இந்த நாட்டில், கொண்டு வந்த மதுவிலக்கினால் ஆயிரக் கணக்கான கொலைகள் குறைந்து விட்டன என்று ஒரு புறம் கணக்கிட்டாலும், இன்று அந்த "ஆயிரக்கணக்கான கொலைகள்" என்ற கணக்கையும் மிஞ்சிவிட்டது, நாட்டில் அன்றாடம் நடந்து வருகிற தற்கொலைகள்.

'அடிமைநாடாக இருந்தகாலம்' என்று சொல்லப்படும் ஆகஸ்டு 15-க்கு முன்னால், நாட்டில் நடந்து வந்த களவுகள் எத்தனையோ, அவை, இன்று ஒன்று பத்தாக வளர்ந்திருக்கின்றன. இல்லாமையினால்—எப்படியோ பிழைக்கவேண்டுமே என்கிற ஏக்கத்தினால் தனி மனிதனாகவோ, சிலர் சேர்ந்தோ நடத்தியது தான் முன்பு பெரும்பாலான திருட்டுகளுக்குக் காரணம் என்றும், அவைகளில் அநேகமாக எல்லாவற்றுக்கும் தடயங்கள் அகப்பட்டு, குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டனர் என்றும் சொல்லக்கூடிய நிலையிருந்தது. இன்று பெருகிவரும் திருட்டுக்களையும், அவைகளில் பலவற்றுக்குத் துப்புக் கிடைக்கவில்லை என்பதையும் எண்ணினால், கட்டுப்பாடாக அங்கங்கே உள்ள ஒரு பெருங்கும்பல் இத்துறையில் ஈடுபட்டிருக்கவேண்டுமோ என்றுதான் எவரும் எண்ண வேண்டியதாயிருக்கிறது.

சுதந்தரம் புகுந்த ஆகஸ்ட்டுக்கு முன்னால், இந்த நாட்டில் வருஷாவாரியாக நடந்த களவு, கொலைகளின் எண்ணிக்கையையும், பின்னால் நடந்திருக்கும் களவு, கொலைகளின் எண்ணிக்கையையும், அவ்விருவகையின் தரத்தையும் அரசாங்கம் வெளிப்படுத்துமானால், அது நிச்சயமாக எவருக்கும் திகைப்பையேயுண்டு பண்ணும்.

இந்த நிலை விரைவில் மாறாவிட்டால், மாறுவதற்கான வழிவகையைச் செய்யாவிட்டால், அயோக்கியத்தனம் செய்யாத—களவு செய்யாத—கொலைபுரியாத மனிதன் என்ன ஒரு மனிதனா என்கிற நிலைக்குத்தான் சமுதாயத்தைக் கொண்டுபோய் வைப்பதாய் முடியும். கள்ள வியாபாரம் செய்யாத ஒரு வியாபாரி, இந்த நாளில், எப்படி ஒரு வியாபாரி என்று தலையெடுக்க முடியவில்லையோ; பொய், பித்தலாட்டம் பேசாத—செய்யாத வக்கீல், எந்தக் காலத்திலும், எப்படி ஒரு வக்கீல் என்று மதிக்கப்படுவதில்லையோ; லஞ்சம், லைசென்ஸ், சிபார்சு என்று இல்லாத ஒரு காங்கரஸ்காரர், இந்த நாளில், எப்படி ஒரு காங்கரஸ் வீரர்-தியாகி என்று புகழப்படுவதில்லையோ, இவைகளைப் போலவே, அயோக்கியத்தனம் செய்யாதவன் அறிவற்றவன் என்று இழித்துப் பழித்துப் பேசும்படியான நிலை ஏற்பட்டு விடுமானால், இன்றைய நடப்பில், அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நிலை வளரவேண்டியதுதானா? இந்தப் போக்குத்தான் நாட்டுச் சமுதாய மக்களுக்கு—அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு வழி வகுக்கவேண்டுமா? இதை எண்ணி எண்ணி நாம் கவலைப் படுகிறோம். இதற்குப் பரிகாரம்

என்ன? இந்த ஊழலுக்கு அடிப்படை என்ன? இந்த நிலை மாற வேண்டுமானால் முதலில் எங்கே கை வைக்கவேண்டும்? என்பவைகளில் கருத்தைச் செலுத்தி, நாம், மக்களுக்கு—இன்றைய ஆளவந்தார்களுக்கு அடிக்கடி எடுத்துக் காட்டி வருகிறோம்.

ஆனால் இதில் கவலை காட்ட வேண்டிய பொறுப்பிலுள்ள, அரசியலை நடத்தும் ஆளவந்தவர்கள்—அவர்களை ஆட்டிப் படைப்பவர்கள் என்ன செய்கிறார்கள்? களவும் கொலைகளும் கண்ணுக்குத் தெரியவில்லையா? காதுக்கு எட்டவில்லையா? அல்லது அவை சர்வ சாதாரணமென்று நினைக்கிறார்களா?

சமுதாயத்தில் ஊழல் என்றால், மக்களே திருந்தவேண்டுமே தவிர, வேறு எப்படி அது சாத்தியப்படும் என்று கேட்கிறார்கள் காங்கரஸ் பெருந் தலைகள். மக்களுக்கு உரிமையுணர்ச்சி வந்துவிட்டது; ஆனால் பொறுப்புணர்ச்சி வேண்டாமா என்று இதை விளக்குகிறார்கள் அவர்கள்.

பொறுப்புணர்ச்சி இல்லை என்று கண்டு பிடிக்கும் இவர்கள், பொறுப்புணர்ச்சியை மக்கள் கொள்வதற்குச் செய்திருக்கும் வழி என்ன? வந்து விட்டது உரிமையுணர்ச்சி என்று வாய் கூசாமல் சொல்லுகிறோமே, உண்மையாகவே மக்களிடையே உரிமையுணர்ச்சி பிரதிபலிக்கிறதா, உரிமையை மேலும் மேலும் இழந்து வருகிறோம் என்கிற உணர்ச்சி பிரதிபலிக்கிறதா என்பதை ஏன் எண்ணிப்பார்க்கக்கூடாது? சமுதாய ஊழலுக்குக் காரணம், சமுதாயத்திலுள்ள தனித்தனி மக்களே என்று சண்டமாருதமாகப் பொழிந்து தள்ளும் இவர்கள், சமுதாயத்தின் வழி காட்டியாக—சமுதாயத்தை நடத்திச் செல்பவர்களாக உள்ள நம்முடைய தாறுமாறான போக்கே—நம்முடைய இழி நடத்தையே சமுதாயத்தில் எதிரொலிக்கிறது என்று ஏன் கண்ணியமாகஒப்புக்கொண்டு அதற்கான பரிகாரம் ஏன் செய்யக்கூடாது?

பொறுப்பு என்பதே உரிமையின் மீது தானே! உரிமையுள்ள இடத்தில் பொறுப்பை உரக்கக் கூவித்தானா அழைத்து வரவேண்டும்? உரிமையுணர்ச்சி வந்து விட்டது, பொறுப்புணர்ச்சி வரவில்லை என்கிறவர்கள், உண்மையாகவே உரிமையுணர்வு எது என்றே அறியாதவர்களாக இருக்கவேண்டும் அல்லது உண்மையைத் திரித்துக் கூறும் உலுத்தர்களாக இருக்கவேண்டும். ஏன்? உரிமையும் பொறுப்பும் ஒன்றோடொன்று இணைந்தவை; இணைந்தவை மட்டுமல்ல கலந்தவை! எங்கெங்கு உரிமையுண்டோ அங்கெல்லாம் அந்த உரிமையின் முழுப் பகுதியிலும் பொறுப்புணர்ச்சிபற்றிப் படர்ந்திருப்பதையே ஒவ்வொருவரும் காணுகிறோம்.

பொறுப்புணர்ச்சி இல்லை என்றால் அங்கு உரிமை யுணர்ச்சி இல்லை என்பதுதான் தெளிவு. மக்கள் பொறுப்புணர்ச்சி யுடையவர்களாக—சமுதாயத்தின் அங்கத்தினர்களாகிய நாம் செய்யும் ஒவ்வொன்றும் சமுதாயத்தையே பாதிக்கும் என்கிற பொறுப்பை யுடையவர்களாக இல்லை என்றால், "நம் சமுதாயம்" "நம் நாடு" என்கிற உரிமை யுணர்வு நிச்சயமாக மக்களுக்கு இல்லை என்பது தானே அதற்கு உண்மை.

இந்த உரிமை யுணர்வை மக்கள் கொள்ளும்படி இன்றைய ஆளவந்தார்கள் செய்திருக்கும் ஏற்பாடு என்ன? ஆளவந்தவர்களின் மூலபலமான காங்கரஸ் இத் துறையில் சாதித்திருப்பது என்ன? சாதிக்கப்போவது என்ன?

நாள் முழுவதும் பாடுபடுகிற பாட்டாளிக்கு, 'பாட்டின் பலனிலே பங்குண்டு அவன் நடைப் பிணமாய் வாழ்வதற்கு' என்றிருக்கும் நிலைமாறி, பாடுபட்டுக்கிடைக்கும் பலனை பாடுபடுபவனே அடைவான் என்கிற நிலை வந்து விட்டதா? அந்த நிலைக்கான அடிப்படை போடப்பட்டிருக்கிறது என்றாவது, பாடுபடுபவன் இன்றைய நிலையில் எதிர்பார்க்கத்தான் முடியுமா? நிலைமை இப்படி இருக்கும்போது அதாவது உரிமையுணர்வுக்கே இடமில்லாத போது பொறுப்புணர்வைப் பற்றிப் பேசுவதினால் ஏதாவது பயன் உண்டாகிவிடுமா? உரிமையில் செலுத்தப்படும் மற்றவர்களின் ஆதிக்கம் ஒழிக்கப்படாதவரை, ஆதிக்கத்தில் அடங்கி நிற்கும் உழைப்பாளர்களிடத்தில் உரிமையில் ஒரு பொறுப்பை எப்படித் தான் எதிர்பார்க்க முடியும்?

ஆம்! வீட்டுக்கொரு சுற்றுச் சுவர்போல நாட்டுக்கொரு எல்லை கட்டி, நாட்டுச் செல்வம் நாட்டிலேயே சுழலும்படியான வழி செய்யட்டும்! நாட்டு மக்கள், தாம் பிறந்த நாட்டில்—உரிமையுள்ள தாய் நாட்டில், தாம் வாழ ஒரு மார்க்கமில்லையே என்று தவிக்கும் தவிப்படங்க வழி வகுக்கட்டும்! உழைப்பவர் யார், யார் உண்டோ 'அவர்களுக்கெல்லாம் உல்லாச வாழ்வுக்கு நாட்டில் இடமுண்டு என்கிற பிரகடனத்தை விடுக்கட்டும்! மக்களின் மொழி கலை, நாகரீகம் முதலியவற்றில் மக்களுக்கே முழு உரிமையும் என்கிற பேச்சை நடத்தையில் காட்ட முன் வரட்டும்! மக்கள் மக்களாகவே மதிக்கப்படுவர், மக்களுக்குள் எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லை என்கிற நம்பிக்கையை யூட்டட்டும்!

இதுதான் இன்று திராவிடர் கழகம் கூறுவது, வேண்டுவது;

## "ஈரோடுவாசி" ஆசிரியர்மீது வழக்கு.

ஈரோடு தாலுக்கா மக்களின் பொது நலனுக்கென எவ்விதக் கட்சிப்பற்றும் இல்லாமல், சென்ற ஒரு வருடமாக நடைபெற்று பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கும் 'ஈரோடுவாசி' என்னும் வாரப்பத்திரிகை ஆசிரியரும், பிரசுரிப்பவருமான தோழர் ப. ஷண்முக வேலாயுதன் மீதும், அச்சிடுபவரான தமிழன் பிரஸ் தோழர் என். கரிவரதசாமி மீதும் ஈரோடு டாக்டர் ஜே. டி. ராஜா எம். பி. பி. எஸ் (பி) என்பவர் இ. பி. கோ. 500 பிரிவுப்படி ஈரோடு அடிஷனல்முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

வாயிதா 26-2-49 தேதி போடப்பட்டிருக்கிறது.

வழக்குத் தொடர்ந்திருப்பதற்குக் காரணம் 5-12-1948-ந் தேதி "ஈரோடுவாசி"யில் "போலி டாக்டர் சாயம் வெளுத்தது" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட சேதியேயாகும் எனத் தெரிகிறது.

# இமாலயத்தைத் தாண்டினால்தான்

# இலட்சியவாதி?

★

என்னே! இமயத்தைத் தாண்டினால்தான் இலட்சியவாதியா? இல்லாவிட்டால் அலட்சியவாதியா? என்னே! அறியாமை! மேகத்தினுள் மறைந்து செல்லும் ஆகாய விமானத்தின் துணைகொண்டு தாண்டமுடியாத இமாலயத்தை, அதுவும் பல பல நூதன அதிசயிக்கக்கூடியவைகளைக் கண்டுபிடித்த, கண்டுபிடித்துக்கொண்டிருக்கும் விஞ்ஞானிகளாலும் பிரயத்தனப்பட்டுத் தாண்டமுடியாத; இல்லை, உச்சியையே கண்டுபிடிக்கமுடியாத இமாலயத்தைத் தாண்டினால்தான் இலட்சியவாதியாக முடியும் என்று கூறும் இவனுக்குப்பித்தப்படபடப்பாக இருக்கலாமோ! அல்லது இலங்கையின் அருகாமையில் வாழ்வதனால் அதுவும் இராவுணனுடைய பெயரைச் சூட்டிக் கொண்ட காரணத்தினால் ஒரு சமயம் (இராவணன் ராமன் போராட்ட காலத்தில்) ராமனைக் கனவில் கண்ட இராவணன் அலறித் துடிதுடித்தானாமே (கதையில்தானேயொழிய உண்மையில் அல்ல) அதேபோல இவனும் எதையோ நினைத்து, இவ்விதம் உளறிக்கொட்டுகிறானோ என்னமோ வென்று எண்ணிவிடாதீர்கள். ஆர அமர இருந்து, வாசித்து பின் ஒரு முடிவுக்கு வாருங்கள்.

விஞ்ஞான ரீதிப்படி நாளை என்பதை 1000 வருடம் என்றுகூடச் சொல்லலாம். அதன்படியே உலகத்தில் வாழும் மக்கள் அனைவரையும் நிபுணர்கள் என்றுகூடக் கூறலாம். உதாரணத்துக்காக ஒரு பைத்தியக்காரனை எடுத்துக்கொள்வோம். ஒரு பைத்தியக்காரனின் மனப்பான்மையைப்போலவோ, நடிப்பைப் போலவோ, வாய் பிதற்றுவதைப் போலவோ, பிதற்ற, நடிக்க, 92-வது வயதில் நூல் எழுதும் பேரறிஞர் பெர்னாட்ஷாவால்கூட முடியாது. அதேபோல் (பைத்தியத்தால்) பெர்னாட்ஷாவாகவும் முடியாது. எனவே பெர்னாட்ஷா அறிவிலும் ஆராய்ச்சியிலும் பெரியவர். பைத்தியக்காரன் வாய் பிதற்றுவதிலும் பைத்திய நடிப்பிலும் பெரியவன். ஆனால் செய்கையும் அதனால் ஏற்படும் பலனும் மாறுபட்டது.

அதுபோலவே உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் லட்சியவாதியாகத் திகழ்வார்கள். சிலர் நிரந்தரமாக ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தவர்களாகவும், சிலர் சந்தர்ப்பத்திற்கேற்ற கொள்கையை உடையவர்களாகவும், சிலர் காலத்திற்கேற்ற கருத்துக்களை தாங்கியவர்களாகவும், சிலர்சுகபோகங்களை அனுபவித்து, லீலாவினோதங்களில் லயிப்புக்கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அதற்காகவே முழுமூச்சாகக் கச்சம்கட்டி வேலையும் செய்வார்கள். விஞ்ஞானத்தின்படி இவர்களும் இலட்சியவாதிகள்தான். ஆனால் நான் கூறப்போகும் இலட்சியவாதிகள் இந்தப் பட்டியலைச் சார்ந்தவர்கள் அல்ல.

தான் பிறந்த நாட்டின் விடுதலைக்காகவும்,—தன் இன மக்களின் நல்வாழ்வுக்காகவும், உழைக்க முன்வரும் உழைப்பாளிகளையே குறிப்பிடுகிறேன், இமாலயத்தைத் தாண்டினால் தான்; இலட்சியவாதியென்று. இமாலயத்தின் அளவுமட்டுமல்ல,அதைவிடப் பெரியது பயங்கரமானது என்று கூடக் கூறுவேன். ஏனெனில் இமாலயத்தின் உயரம், அகலம், நீளம் ஆகியவைகளை இன்னதுதான் என்று கணக்கெடுத்து விட்டார்கள் விஞ்ஞானிகள். ஆனால், பணம், பாவம்,பழி, கொலை, கொள்ளை, பொறாமை, துன்பம், துயரம், மனக்கவலை ஆகியவைகளின் அளவு இன்னதுதான் என்று எந்த அறிஞரும் இதுவரையிலும் கூறினாரகளில்லை, முயற்சிக்கவுமில்லை; முயற்சித்தாலும் முடியவும் முடியாது. இவ்விதமான பணம், பாவம், பழி, பொறாமை, துன்பம், துயரம் ஆகியவைகளைக் கண்டு, அஞ்சாது, அடிபணியாது, ஆசைப்படாது, இலட்சியத்தைக் கைவிடாது, வழி நடந்தால் தான் தன் எண்ணம் பூர்த்தியாகும், இன்றேல் இல்லை. இவ்வளவு இன்னல்களுக்குஇடர்ப்படவேண்டியநிலை ஒரு இலட்சியவாதிக்கு ஏற்படும் என்ற எண்ணத்தால்தான், இமாலயத்தைத் தாண்டவேண்டும் என்று கூறினேன். ஏன்? அதைவிடப் பெரியது என்று கூடக் கூறலாம்.

சகல யோக்கியதாம்சங்களையுடைய ஒரு தோழர், பொதுநலச்சேவையிலே ஆர்வங்கொண்டு, பொதுநலத்தொடர்புள்ள ஓர் இயக்கத்திலே சேர்ந்து தன்னுடைய நாணயத்தினாலும் சலியாத உழைப்பினாலும், மக்களின் நம்பிக்கைக்கும், பெருமைக்கும் ஆளாகிவிடுவார். உடனே தன் உழைப்புக்கும் பலன் கிடைத்திருக்கிறது என்ற எண்ணத்தைவிட்டு, கர்வம் தலைக்கேறி, தன்னைப்போற்றின மக்களை அலட்சியமாகக் கருதி, தான் தான் பெரியவன் என்ற மமதை கூடாது. கூடிவிட்டால் சொல்லத்தேவையில்லை, போற்றப்பட்ட மக்களாலேயே வெறுக்கப்படுவான், முகவரி தெரியாத இருட்டறையிலும் தள்ளப்படுவான். எனவேதான் தான் என்ற கர்வத்திற்கு உட்படாது, அதைச் கடந்து வழி நடக்கவேண்டும். இவ்விதம் வந்து தொண்டாற்ற ஆரம்பித்துவிட்டால், கொஞ்சம் பொறுப்பிற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படும். இதில் கொஞ்சம் பணமும் சம்பந்தப்பட்டதாக இருக்கும். பணம் என்ன சாமான்யமானதா? மன்னாதி மன்னர்களை யெல்லாம் மண்டியிடச் செய்ததல்லவா! அதுதான் சொல்வார்களே, 'பணம் என்றால் பிணமும் வாய் பிளக்கும், என்று. அவ்வளவு சர்வவல்லமை பொருந்தியது அல்லவா பணம்! இப்பணம் பல உருவத்திலே தோன்றி மயக்கவரும். கூடகோபுரமாளிகைகளைக் காட்டும். விலை மதிக்க ஒண்ணாத ஆடை ஆபரணங்களைக் காட்டும், நல்லழகிகளைக்காட்டும். இவர்களின் ஆடல்பாடல்களையும் காட்டும். இவைபோன்ற பல பல. இவைகளுக்கெல்லாம் கட்டுப்படாது; ஆசைப்படாது, மயங்காது, பொதுநலசேவையே தனது பிறப்புரிமை என்ற நோக்கத்தோடு தாண்டிச் செல்ல வேண்டும். இதைத் தாண்டி வந்துவிட்டால், பொறுப்பு வாய்ந்த பதவி வகித்து தொண்டாற்ற வேண்டிய நிலை ஏற்படும். இதன் மூலம் நாட்டிற்கு கொஞ்சம் அறிமுகமாகிவிடும். மக்களின் அன்பிற்கும் பாத்திரமாகிவிடுவார்கள். இந்த நேரத்தில் தான் பொறாமைக்காரர்கள் கிளம்புவார்கள். தன்னோடு உழைப்பவர்கள் ஒன்று இரண்டு பேர்கள் கூட பொறாமைக்காரர்களுக்கு ஒத்துழைக்க ஆரம்பிப்பார்கள். எதிர்க் கட்சிகளிலே இருந்தும் வீழ்த்த கங்கணம் கட்டுவார்கள். விலை பேசவும் ஆரம்பிப்பார்கள். ''நேற்றுப் பிறந்த பயலுக்கு நாட்டில் இவ்வளவு செல்வாக்கா! இவனை எப்படியாவது வீழ்த்த வேண்டும். மக்கள் இவன்பால் கொண்ட அன்பெனும் கயிற்றை அறுத்தெறிய வேண்டும்''!

முழக்கமிடுவது!

இந்த உரிமையுணர்வு மக்களுக்கு ஊட்டப்படாதவரை, சமுதாயத்தில் ஒரு ஒழுங்கையோ, சமுதாய மக்களிடம் நாணயத்தையோ, நல்ல நடத்தையையோ, பொறுப்பான செயல்களையோ எப்படி எதிர்பார்க்க முடியும் என்று நாம் கேட்கிறோம்.

எனக் கங்கணம் கட்டி வீழ்த்தும் பணியில் ஈடுபட்டுவிடுவார்கள். கனவில் கருதாததை யெல்லாம் மக்களிடம் கட்டிவிடுவார்கள். "ஆசாமிக்கு ஊரில் புகழ் ஏற்பட்டதும், பணக்காரர்கள் கூட பணிய ஆரம்பித்துவிட்டார்கள்; பணமும் கொடுக்கிறார்கள், அதையெல்லாம் பெற்றுக் கொண்டு, மக்களின் பெயரைச் சொல்லி சுகபோகங்களை அனுபவித்து வருகிறான். மக்களை மதிப்பதில்லை. தலைவருக்கு மரியாதை செலுத்துவதில்லை. தலைமைப் பதவியின் ஆசை அதிகரித்துவிட்டது," என்றெல்லாம்மக்களிடம் கயிறு திரித்துவிடுவார்கள். இப்பேர்ப்பட்ட புரட்டுகளை நம்பும் மக்களும் இருக்கத்தான் செய்வார்கள். இதைக் கண்டு உற்சாகக் குறைவோ, தளர்ச்சியோ அடையக் கூடாது. எது வரினும் வரட்டும், நான் அஞ்சப் போவதில்லை, துயரப்படுவதில்லை. நான் கொண்ட இலட்சியத்தை விட்டுக்கொடுக்கவும் போவதில்லை. எனது எண்ணம் நிறைவேறவேண்டும் என்று ஆசைப்படுகிறேனே ஒழிய, மக்கள் என்னைப் போற்றவேண்டும் என்ற மனப்பான்மை இல்லை என்ற உறுதி வாய்ந்த தூய்மையான உள்ளத்தோடு தனது இலட்சியப்பாதையை நோக்கிச் செல்லவேண்டும்.

அதுவும் போக, பல நூற்றாண்டுகளாக மக்களின் மனதில் குடிகொண்டு, அனுஷ்டித்து வருகிற ஒரு கொள்கையிலிருந்து, மக்களைத் திருப்புவது என்பது இலேசான காரியமல்ல. மக்களின் நல்வாழ்வுக்காகக் காலத்திற்கேற்ற கருத்துக்களை மக்களிடத்தில் எடுத்துச் சொன்னால், எந்த மக்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அரும்பாடுபடுகிறோமோ, அதே மக்களாலேயே வெறுக்கப்படுவோம், நிந்திக்கப்படுவோம், பல இன்னல்களுக்குக்கூட இரையாக வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம்! அப்பொழுது; "என்ன இந்தமக்களின் வாழ்வுக்காக நாம் உழைக்கிறோம். இவர்களே நம்மைத் தூற்றுவதா?" என்ற கேள்வியை மனதிற்குள் எழுப்பி குழப்பத்தை உண்டுபண்ணிக் கொள்ளக்கூடாது. பாவம் பல ஆண்டுகளாகக் கடைப்பிடித்த கொள்கை, அவர்களை இவ்விதம் நம் கொள்கையைச் சிந்திக்க முடியாத அளவுக்குச் செய்துவிட்டது என்ற பரிதாப எண்ணமே ஏற்பட வேண்டும். அப்படியானால் தான் இலட்சியப்பாதையை அடையலாம்.

அதுமட்டுமல்ல, இலட்சிய வாதிகளுக்கு தம் சுய வாழ்க்கையிலே நிம்மதி இருக்காது. வறுமை அதிகரிக்கும், வாழ்க்கை பாழாகும். குடும்பத்திலே வெறுக்கப்படுவான், உற்றார் உறவினர்களால் புறக்கணிக்கப்படுவான். என் அதிகம் கூறுவானேன், பொதுப்படையாகக் கூறினால், பொதுவாழ்க்கை இருக்கிறதே அது சிறை, கம்பு, கத்தி, அரிவாள், துப்பாக்கி, வெடிகுண்டுருபத்தில் வந்துகூட நம்மைத்தாக்கும், அப்பொழுது மிரண்டு விடக்கூடாது. தனது உயிரை வெல்லமாகக் கருதக் கூடாது. புறமுதுகு காட்டி ஓடக் கூடாது. தன் வாழ்க்கையில் தன் இனமக்களுக்காக வேண்டி, விலை மதிக்கமுடியாத உயிரையே அர்ப்பணம் செய்தோம் என்ற மகிழ்ச்சியில் செல்லவேண்டும். இவ்விதமான இடையூறுகளை எல்லாம் எதிர்பார்த்தே பொது வாழ்க்கையில் இறங்கவேண்டும். இல்லாவிட்டால் பொதுவாழ்க்கை என்ற பக்கமே தலை நீட்டிபடுக்கக்கூடாது. இவைகளையெல்லாம் உணர்ந்துதான், இமாலயத்தைத் தாண்டினால்தான் இலட்சியவாதி என்று கூறினேன். இப்பொழுது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

"இலங்கேசன்"

(7ம் பக்கத்தொடர்ச்சி)

யனை விரட்டியடிப்பதில் செலுத்தப்பட்டது. பேரளவில் தம் ஸோவியத் முறைகளை விட்டுக் கொடுத்து, கம்யூனிஸ்டுகள் சியாங்கோடு கலந்து கொண்டனர். ஆனால் அவர்களுடைய சக்தி யெல்லாம் சண்டையில் விரயமாகவில்லை; யுத்தம் முடிந்ததும் சியாங்கோடு மறுபடியும் தொடுக்கவேண்டிய போருக்கான முஸ்தீப்புகளைச் செய்வதில் ஈடுபட்டது.

சப்பானியர்கள் சரணாகதி அடைந்த சமயம், கம்யூனிஸ்டு ராணுவத்தில் 10,000,00 வீரர்கள் இருந்தார்கள். ஜப்பானியர் விட்டுச் சென்றவற்றில் மிகச் செழிப்பான நிலங்கள் மாஸேடங்கின் கையில் சிக்கியிருந்தன. அவருடைய ஆதிக்கத்தின் கீழிருந்த சீன மக்களின் எண்ணிக்கை 5-கோடி.

மாஸேடங்கின் கை எவ்வளவுக்கெவ்வளவு யுத்தத்தில் ஓங்கிவிட்டதோ அவ்வளவுக்கவ்வளவு சியாங்கின் பலம் தளர்ந்துவிட்டது. ஆகவே இன்று கம்யூனிஸ்ட் ராணுவம் சீனாவில் வெற்றிமேல்வெற்றி பெற்று வருவதில் ஆச்சரியமில்லை.

நல்ல உயரமும் (5-அடி 8-அங்குலம்) ஏற்ற பருமனுமாயுள்ள (200 பவுண்டு எடை) மாஸேடங் வாழ்க்கையைச் சுவைத்து அனுபவிக்கும் ஒரு ரசிகர். இதுவரை அவர் நான்கு முறை திருமணம் செய்துகொண்டிருக்கிறார். இடைவிடாமல் சிகரெட் குடிப்பார். பூசணி விதையையும், வேர்க்கடலையையும் நிறையத் தின்பதில் இவருக்கு ஆசை. சில மாதங்களுக்கு முன்பு அவர் உடம்புக்கு ஒவ்வாது என்று வைத்தியர்கள் விலக்கும்வரை, மாஸேடங் மதுபானம் செய்துவந்தார்.

ஆனால் அவர் இன்னும் குடியானவர்களோடு குடியானவனாகத் தான் பழகிவருகிறார். அதிகாலையில் அவர் வீட்டுப்பக்கம் சென்றால், அவரும் ஜெனரல் சூடேயும் கூடைகளைத் தூக்கிக்கொண்டு தெருவில் எரு பொறுக்குவதைப் பார்க்கலாம்!

"குமுதம்"

[6ம் பக்கத் தொடர்ச்சி]

அறிவை அறியுந்தோறும், அறியாமை வளர்ந்து கொண்டே போகிறது. நாம் ஒவ்வொன்றையும் தெரிந்து கொள்ளும்போது, நம்மிடம் அறியாமை மேலும்,மேலும் இருப்பதையே அறிகிறோம். "அறிதோறும் அறியாமை கண்டற்றால்" என்று வள்ளுவர், இதனை அன்றன்று (நாள்தோறும்) புதுமையாகத் தோன்றும் காதலின்பத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். ஒரு மேனாட்டு ஆசிரியர் "முட்டாளையே பார்க்கக் கூடாதென்றால் மனிதன் நிலைக்கண்ணாடி இல்லாதஅறைக்குள் கிடக்கவேண்டும்" என்று கூறியிருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

**தலையாய அறிவு.**

அறிய வேண்டுவனவற்றை அறிந்து, பணிவுடனும், பண்புடனும் நடந்து சிறப்புப்பெற வேண்டுமென அறிவுறுத்திய வள்ளுவர், கெடுதல் செய்வாருக்கும் நன்மை செய்யும் பொறுமையுடன் கூடிய அறிவையே தலையாய அறிவு என்கிறார். 'அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய செறுவார்க்கும் செய்யாவிடல்' என்கிறார். இன்னாதவற்றைச் செய்பவருக்கும், இனியவற்றைச் செய்வததான் "சால்பு" என்று மற்றோரிடத்திலும் வள்ளுவர் இதை வலியுறுத்தி உள்ளார்.

**புல்லறிவாண்மை**

ஒருவனுக்கு வறுமை என்று

சொல்லப்படுவது செல்வம் இல்லாதபோதல்ல, அறிவில்லா நிலைமையில்தான் ஏற்படுகிறது. எனவே ஏழை—என்பது அறிவிலேதான் அன்றிப் பொருளிலே அதைப் பாராட்டுவது பேதைமை. செல்வன் அறிவின்றேல் நல் வாழ்வு வாழ்வது எவ்வாறு இயலும்? மன நிம்மதி எங்கிருந்து வரும்? ஆனால் அறிவுடையவன் 'நான் அறிஞன்' என்று செருக்குள்ளவனாயின் அவனே முதல்தரமான அறிவிலியாவான் என்கிறார் வள்ளுவர். நில்லாத இயல்புடையவற்றை நிலையானவை என்று உணர்வதும் புல்லறிவாண்மையாகும். தன்னிடமுள்ள குற்றங்களை நீக்கும் தன்மையுடையவனிடம்தான் அறிவு சிறப்புறும். எனவே தீயன நீக்காது மனத்திற்கு அடிமைப்படும் அறிவு "பயன்படாத செல்வம் போல" ஆகும்.

### அறிவு திரிவதும் அதை இழப்பதும்;

அறிவு நண்பர்களால் திரியும், மாறுபடும்! "மனத்துளது போலக் காட்டி, ஒருவற்கு இனத்துளதாகும் அறிவு" என்பது குறள். மேலும் மழை நீர் தான் விழும் இடத்தியல்பால் மாறிவிடுவது போல, அறிவு—அந்த அறிவுடையவன் பழகும் நண்பர்களின்மூலம் மாறுபட்டுவிடும் என்கிறார் வள்ளுவர். 'நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு', என்று பொய்யாமொழி கூறுகிறது. "உன் நண்பன் யாரென்று சொல், உன்னைப்பற்றித் தெரிந்துகொள்கிறேன்' என்ற ஆங்கிலப் பழமொழி இங்கே நினைவு கூரற்பாலது.

ஒரு மனிதனிடமுள்ள அறிவு அழிந்துபோவது அல்லது செயலற்றுவிடுவது. அந்த மனிதனின் வாழ்க்கை நிலையைப் பொறுத்திருக்கிறது. அவன் எவ்வளவுதூரம் அறிவுடையவனாக இருந்தாலும் பிறரிடம் பிச்சை வாங்கிப் பிழைக்கும் நிலையில் இருந்தால் அவனுடைய அறிவு எத்தகையதாகும்? அறிவு பொருளைப் படைத்தாலும், தனி மனிதனிடம் உள்ள வறுமை அவன் அறிவையே அழித்துவிடும் என்ற உண்மையை வள்ளுவர் மிகவும் தெளிவுபடக் கூறுகிறார். பொருளின்றிப் பிறரிடம் இரந்து வாழ்பவன், சொந்தமான எந்தக் கருத்தையும் சொல்லமுடியாது. எல்லாவற்றுக்கும் அடிமைப்பட்டே ஆகவேண்டும். 'ஆமா' போட்டே தீரவேண்டும். தற்பெருமை எவ்வாறு ஒருவன் புகழை அழித்துவிடுமோ அதுபோல அன்றாடம் இரந்து வாழும் வாழ்வு ஒருவனுடைய அறிவை அழித்துவிடும் என்கிறார் வள்ளுவர்.

பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்சநிரப்புக் கொன்றாங்கு'

என்பது குறள். அடிமைப்பட்ட நாட்டு மக்கள், பொருளாதாரச் சீர்கேட்டால் வருந்துவதும், அதன் காரணமாக அந்நாட்டு மக்களின் அறிவு மங்கி உணர்விழந்து போவதும் இயற்கைதானே!

எனவே, 'பண்புடையாளர் தொடர்பு' நமக்கு நாள்தோறும் நன்மை பயக்கும் என்பதும், இன்றேல் தீயவர் தொடர்பால் நம் நல்லறிவும் திரிந்துவிடும் என்பதும், இரந்து வாழும்வாழ்வு அறிவையே அழித்து மனிதனை விலங்கினும் கேடாக்கிவிடும் என்பதும் வள்ளுவரின் கருத்துகள் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

### அறிஞரின் தோற்றம்!

நன்றாக அறிந்த அறிஞரின் நெற்றி சுருங்கி இருக்கும், அல்லது நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் பண்புடையவராக அவர்கள் இருப்பார்கள். அவர் மனதில் கவலை குடிகொண்டிருக்கும். அது தன்னைப்பற்றி அல்ல, தன் நாடு, தன் இனம், தன் மொழி இவற்றைப்பற்றி. எனவே அத்தகைய கவலைப்படுவதிலே, அதற்காக உழைப்பதிலேமட்டும் அவர்கள் இன்பம் காணுவர். ஆனால் அறிவில்லாக் கயவரோ கவலையின்றி இருப்பர். அவர்களுக்கு ஏது நாடு, மொழி, இனம் பற்றிய கவலைகள்? தாம் வாழவே தகாத செயல்களைச் செய்து வாழ்வார்கள். எனவே தான் வள்ளுவர் 'நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவலமிலர்' என்று கூறியுள்ளார். ஆனால் அவர்கள் உள்ளீடில்லாத பழம். உடைந்துவிடும் ஓடு. அது நிமிர்ந்து நிற்பதிலே பயனில்லை!

### தெளிவு.

தெளிந்த மனப்பான்மை வேண்டும் என்றால் முதலில் அன்பு வேண்டும், அறிவை அடிப்படையாகக் கொண்டு. அதன் பின் அய்யம் இன்மையும், ஊக்கமும் வேண்டும். ஆசை இன்மையும் இருக்க வேண்டும். இருந்தால் அவனும் தெளிவான நிலையில் இருப்பான், அவன் செயல்களும் தெளிவாக முடியும்.

"அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை, இந்நான்கும் நன்குடையான் கட்டே தெளிவு" என்பது குறளாகும். நன்கு—நன்றாக இருக்க வேண்டுமாம். எனவே அறிவு மிக இன்றியமையாத, எல்லாவற்றுக்கும் வேண்டிய, சிறந்த ஒன்று; ஒப்பற்றது என்பதை ஒத்துக் கொள்ளும் நாம் இனியேனும் நாட்டில் அறிவு வளர நற்றொண்டு புரிவோமாக!

திருக்குறள் தினையளவாயினும், அதன் கருத்துப் பனையளவாகும்! புல் நுனியில் உள்ள பனித்துளி, பெரிய சோலையையும், சூரியனையும் கூட தன்னகத்தே காட்டுவது போல, குறளும் எல்லையற்ற பரந்த அறிவை நமக்குச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் காட்டுகிறது. திருக்குறள் அழியாச் செல்வம், அதுபோலவே 'திருக்குறள் அறிவு'ம் நமக்கு இன்றியமையாதது. குறளனைத்தையும் கற்றுத் தமிழ்நாடு முன்னேறும் காலம் அருகில் வந்துவிட்டது. "இருட்டறைக்குள் ஒளிவிளக்காய்" இவ்வுலகை நமக்கு விளக்கி, வழிகாட்டும் குறளை இனியேனும் கையிலேந்துவோமா? கருத்தில் தாங்குவோமா?

## பகுத்தறிவுப் படிப்பகத்தின் பணிக்குழுக் கூட்டம்.

பூட்டுத்தாக்கு பிப் 1.

மேலமின்னல் "மருத்துவ மனை"யில் தோழர் மணி தலைமையில் பணிக்குழு அமைப்பு நேற்று ஏற்படுத்தப்பட்டது.

தோழர்களான சுதன், சாமிநாதன், நாகரத்தினம், சின்னசுவாமி, முனிரத்தினம், நாராயணசாமி, காளி ஆகியோரை பணிக்குழுவினராகப் பொறுக்கப்பட்டது.

படிப்பக நிதிக்குப் பொருளுதவி செய்வோர் [சுதன், பூட்டுத்தாக்கு, மேல் விசாரம் வழி, (வ. ஆ.) என்ற முகவரிக்கு] அளிக்கவேண்டுமென வேண்டியும், செய்தற்றொழிலுக்கு அரசினர் உதவிபுரியவேண்டியும், குறள் உரையை வரவேற்று விரைவில் வெளியிடவேண்டியும், வள்ளுவர் ஆண்டினையே அனைவரும் வழங்க வேண்டியும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# அநாகரீகச் சட்டம்!

★

சட்டம் என்றால் என்ன? அது எப்போது? ஏன்? யாருக்காக ஏற்பட்டது? அதன் பயன் என்ன? மக்களை மக்களாக வாழச் செய்யவே சட்டம் இயற்றிய நோக்கமானால் அதன் நோக்கம் நிறைவேறிற்றா? இந்நாட்டிலே நடமாடுவது மநு ஆட்சியா? சுய ஆட்சியா? மநுதர்மம் பெற்றெடுத்த இந்துலா இந்துக்களல்லாத (பார்ப்பனரல்லாத) மக்களைச் சூத்திரரென்றும், அரக்கரென்றும், மானாபிமானமின்றி நடத்தி இழைத்த கொடுமைகளை விவரிக்க இயலுமோ! வருணாச்சிரமத்தை வளர்த்துச் சாதிக் கொடுமைகளை உண்டாக்கி, சாதிக்கொரு நீதி வழங்குவதென்றால் அதற்குப் பெயர் சட்டமா? சதியா?

பட்டினிப் பஞ்சம் பரத நாட்டியமாடுகிறது! பாலுக்குச் சர்க்கரை இல்லையே என்று பரதவிக்கிறது ஒரு கூட்டம்! கூழுக்கு உப்பு இல்லை என்று கூம்புகிறது மற்றொரு கூட்டம்! உழைத்து உழைத்து உருக்குலைந்து உயிருக்கு மன்றாடுகிறது பாட்டாளி உலகம்! அவ்வுழைப்பைக் கொள்ளையிட்டு உண்டு உப்புகிறது முதலாளி உலகம்! சட்டங்கள் பிறக்கின்றன. ஆம்! அவசரச் சட்டங்கள், அவைகளை நிறைவேற்ற துணைச் சட்டங்கள் பல பிறக்கின்றன! குஞ்சுகளாகப் பல சட்டங்கள் உள்ளன! கணக்கற்ற சட்டங்கள் கருவில் இருக்கின்றன! இந்த நாட்டிலுள்ள கடவுளர்களையும், சாதிகளையும் கணக்கிட்டாலும் சட்டங்களைக் கணக்கிட இயலாது!

ஆனால் மக்கள் மக்களாக வாழ முடியவில்லையே! கொலை, கொள்ளை, வஞ்சகம், ஏமாற்றுதல் இதுபோன்ற பல தொல்லைக்கோ எல்லையில்லையே!

கொள்ளையிட்டவனைச் சிறைக்கு அனுப்பவும், கொலை செய்தவனைச் சுட்டுக்கொல்லவும் சட்டம் அனுமதிக்கிறது! நீதிவான்களோ நிம்மதி அடைகின்றனர்! அவன் ஏன் திருடினான்? எதற்காகக் கொலை செய்தான்? என்று சிந்திக்க எந்த அறிவாளியும் முன்வந்ததே கிடையாது!

ஒருவனிடமுள்ள ஒரு பொருளை மற்றொருவன் கவர்ந்துசெல்லக் காரணமென்ன...? பொருள் இல்லாத ஒருவன், தன் வாழ்வின் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள, வேறு வழி தோன்றாக் காலத்தில் அவன் பிறர் பொருளைக் கவர்ந்து செல்லுகிறான். அவன் தேவையை அரசாங்கம் பூர்த்தி செய்யுமானால் அவன் ஏன் திருடுகிறான்? அதை விட்டு அவனைத் தண்டித்துச் சிறைக்கு அனுப்புவதனால் அவன் திருந்திவிடுகிறானா...? விடுதலையடைந்த குற்றவாளி மறுமுறை தன் தொழிலைவிட்டு நன்னிலை அடைகின்றான் என்று சொல்லிவிடமுடியுமா?

குற்றவாளிகள் நிறைந்த கண்காட்சி சாலையாகிய சிறைச்சாலையில் பெரும்பாலோர் குற்றமுள்ளவர்களே தவிர, நல்லொழுக்கமுள்ளவர் இருப்பதரிது! புதிய குற்றவாளி அங்குள்ள அனைவரோடும் கலந்து உறவாடி, ஒருவர் வரலாற்றை ஒருவர் அறிந்து, புதிய குற்றவாளி பழைய குற்றவாளியிடம் பயின்று, அரைத் திருடன் முழுத் திருடனாகி அநுபவம் முதிர்ந்த குற்றவாளியாகச் சிறையிலிருந்து வெளிவந்தவுடன், சிறையில் பயின்ற பாடங்களை நடைமுறைக்குக் கொண்டுவருகிறான். மீண்டும் அவன் குற்றவாளியாகிச் சிறைத் தண்டனையை அனுபவிக்கிறான். இதனால் சிறைக்கு அனுப்பப்பட்ட குற்றவாளி திருந்திவிடுகிறானில்லை என்ற உண்மை எளிதில் புலன் ஆகிறது அல்லவா?

சிறைச்சாலை என்பது குற்றவாளிகளை வளர்த்து வரும் பண்ணை! குற்றம் பயிலும் பல்கலைக்கழகம் என்று தான் சொல்லவேண்டும்!

கல்வி அறிவற்ற பாமர மக்கள் நிறைந்துள்ள இந்நாட்டில், வேலையில்லாத்திண்டாட்டத்தின் காரணமாக சோம்பேறிகளாகி, கொள்ளைகள் நடத்தி வாழவேண்டியதைத் தடுக்கச் சிறைச்சாலையைத் தொழிற்சாலையாகவும், அறிவு ஒழுக்கம் கற்பிக்கும் கலாசாலையாகவும் மாற்றப்படுமானால், குற்றங்களற்று மக்கள் நன்னெறியுடன் வாழமுடியுமல்லவா?

திருடுவது குற்றமெனச் சொல்லும் சட்டம், பாட்டாளிகளின் பலனைத் திருடிப்பானைபோல் உப்பும் முதலாளிகளைக் குற்றவாளி என்று கூறாது. ஏமாற்றிக்கொள்ளையிடுதல் குற்றமென்றால்? பட்டப்பகலிலே வெட்ட வெளிச்சத்திலே திதி, கருமாதி, மோட்சதீபம், புண்ணியம், நரகம் சொர்க்கம், என்றெல்லாம் புளுகி ஏமாற்றிக் கொள்ளையிடும் பார்ப்பனர்கள் முதல் நெம்பர் குற்றவாளிகளல்லவா? ஒரு கூட்டம் செல்வங்களை மலைபோல் சேமித்து வைக்கவும், மற்றொரு கூட்டம் ஒருபிடி சோற்றுக்கு அன்னக்காவடிகளாக அலைந்து திரியவும்; பிறிதொரு—கூட்டம் மதத்தின் பேராலும், கடவுளர்களின் பேராலும் கொள்ளையடிக்கவும், பாலகன் பாலுக்கழ பழனிவேலனுக்குப் பாற்குடங்காவடி எடுக்கவும், சட்டம் அனுமதிக்குமானால், சட்டமென்பதைப் பார்ப்பனர்களையும் முதலாளிகளையும் பாதுகாக்கும் கோட்டைகளென்று தானே சொல்லவேண்டும்! இக்கோட்டைகளைத் தகர்த்தெறியவேண்டாமா?

மன்னனுக்கொரு நீதி! மடாதிபதிக்கொரு நீதி! சமீன்தாருக்கொரு நீதி! இனாம்தாரருக்கொரு நீதி! பார்ப்பனனுக்கொரு நீதி! பஞ்சமனுக்கொரு நீதி! வழங்கும் வருணாச்சிரமச் சட்டத்தை அழிப்போம்!

அடகு வைக்கும் ஆலயங்களை அறிவுச் சாலையாக மாற்றியமைப்போம்! சோம்பேறிக் கூட்டங்களை உழைப்பாளிகளாக ஆக்கிடுவோம்! தனிஉடைமையைப் பூத்திடச் செய்வோம்! இதற்குத் தடையாயுள்ள மநுதர்ம சட்டத்தை மண்ணோடு மண்ணாய் மறைத்து அழிப்பதே நம் முதல் வேலை! ஆம்! இன்றே கொட்டுங்கள் முரசை! கதர் சட்டைக்கொரு நீதி கந்தைச்சட்டைக்கொரு நீதி வழங்கும் அநாகரீகச் சட்டம் அழியட்டுமென்று.

"பி. எஸ். இளங்கோவன்"

---

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மாகப் பிணைந்திருக்கும் கொடியும் மரத்தோடு இணைந்ததால் ஒன்றாவதைப்போல!

"கவிஞனின் சிந்தனை சுழலாமல் நின்றது.... அறுபடவில்லை...... அவனைச் சுற்றி ஒருவித மோக மூட்டும் மணம்......சுற்றிப் பார்த்தான்..... "அரசி..." என்று அழைத்தும்பார்த்தான் மெதுவாக...யாருமில்லை...

அந்த மணத்தை முன்னொரு நாள் இவன் நுகர்ந்த நினைவு வருகிறது... ஆம்... அந்த முதலிரவிலேதான்...

முல்லை மலர் சூடிய கூந்தலுடன் வந்திருந்தாள் வனிதை அன்று.

ஆனால் அணைப்பின் பிணைப்பிலே அமுதம் உண்டபொழுது, அவள் கூந்தலிலே முல்லை மலரின் மணம் தவிர வேறு ஒரு மணம் இருப்பதையும் நுகர்ந்தான்—அதே மணம்தான் இந்த மணமும் என்ற நினைவுச் சுழலில் சிக்கினான்...

சீரழகை எதிர்பார்த்த சித்தம், சிந்தனையிலாழ்ந்தது!

அரண்மனை மகளிர், கூந்தலுக்கு மணம் ஊட்டுவதற்கு அகில் முதலிய நறும் புகைகளை ஊட்டுவதுண்டு. ஆனால் இவன் நுகர்ச்சிக்கு, அது அகில் முதலிய நறும் புகையின் மணமாகப்படவில்லை...சந்தேகம் எழுந்

தது அது கூந்தலின் இயற்கை மண மாக இருக்குமோ என்று...

கருத்திலே கண்டதைக் கவிதை யிலே வடிக்கும்பொழுது...கள்ளுண்ட காதல் வண்டொன்று காதலனைத் தேடி வருகின்றது...அதைக் கூப்பிட்டுக் கேட்கிறான்...வண்டிற்குப் பேசத் தெரியாது...நாம் சொல்லுவதை உண ரவும் முடியாது...ஆனாலும் அதனிடம் கேட்கிறான்...காதலுக்கும், கவிதைக்கும், பைத்தியத்திற்கும் வேற்றுமை இல்லை என்பது அதனால்தான் போலும்!

கேட்கிறான்......

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமஞ்செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறி யெயிற்(று) அரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே!
—குறுந்தொகை.

(பொருள்:— தேன் நிரம்பிய பூக்களை ஆராய்ந்து வாழ்வை நடத்துகின்ற அழகிய சிறகைக் கொண்ட வண்டே! இச்சகம் பேசாது உண்மையில் நீ உணர்ந்ததை மட்டும் உரைப்பாயாக. நெருங்கிய காதலினையும் மயிலின சாயலையும், நெருங்கிய பற்களையும் உடைய என் காதலியின் கூந்தலிலுள்ள மணத்தைப்போன்ற, நறுமணமுள்ள பூவினை நீ தேன் நாடி உண்ணப்போகும் பூக்களிலே கண்டதுண்டோ?)

கவிஞன் கேட்டதைக் கண்டுகொண்டு சொல்வதாகப் பாடிக்கொண்டே பறக்கிறது வண்டு! அதைக்கண்டு கருத்திழந்த நிலையில் நிற்கும் பண்ணராசன் சிரிப்பொலி கேட்டுத் திடுக்கிடுகிறான்...

பின் என்ன...?

பூங்காவில் கொள்ளைதான் இன்பம்......

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தார்கள் என்பது உங்களுக்குக்கூடத் தெரிந்த விஷயந் தானே...!

வேவா:- ஆமாமாம்! அது எல்லாருக்குந் தெரிந்தவிஷயந்தான்...!

முதலியார்:- அப்போது, விமலா தன்னைத்தான் கலியாணம்செய்து கொள்ளும் என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்திருப்பான்! பிறகு, விஸ்வன் அதற்கு விரோதியாக வாய்க்கவே, விஸ்வனைப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணம் ராஜனுக்கு ஏற்படுவது இயல்புதானே...?

வேவா:- ஓகோ! அப்படியா சங்கதி! அப்படியானால்...! ராஜன் தான் விஸ்வனைச் சுட்டிருப்பான் போல் இருக்கிறதே...?

முதலியார்:- ஊ...ப! அப்படி வாருங்கள் வழிக்கு! பாவம்! நீங்கள் சி. ஐ. டி. உத்தியோகத்திற்கே புதிதல்லவா?

வேவா:- அதுவும்! இதுதான் முதல் கேஸ்!

முதலியார்:- பரவா இல்லை சார்! எல்லா விவரமும் நான் சொல்லிக் கொடுக்கிறேன். இருந்து சாவகாசமாகத் தெரிந்து கொண்டு போங்க சார்! [அழைப்பு மணியைத் தட்டுகிறார்.]

பியூன்:- [உள்ளே வருகிறான்.]

முதலியார்:- உடனே! போய், ஆப்பெல்ஜீர், ப்ருட்ஸாலிட், பாதாங் கீர், ஸிகரெட் எல்லாம் வாங்கிக் கொண்டு வாடா.

வேவா:- வேண்டாம் வேண்டாம்! அதெல்லாம் எதற்குத் தங்களுக்கு வீண்சிரமம் சார்!

முதலியார்:- [பியூனை நோக்கி] ஊம்! நீ போடா!;—பரவா இல்லை வரட்டும்சார்! உங்களைப் பார்த்தால் மிகவும் நல்லவராகத் தோன்றுகிறது! எனக்குத்தெரிந்த சில உண்மைகளையாவது உங்களுக்குச் சொல்லிவிடவேண்டும் என்று விரும்புகிறேன். ஏனென்றால், முதல் முதல் ஒரு கேஸில் நுழைந்து கெட்ட பேரெடுக்கப் படாது பாருங்க...?

வேவா:- நல்லவேளையாப் போச்சு சார் உங்களைக் கண்டு பேசினது...! அடா அடா! அந்தப் பயல் ராஜனை நான் ரெம்ப யோக்கியனென்றல்லவா கருதிவிட்டேன்...!

முதலியார்:- நீங்கள் கருதியது தவறில்லைசார்! அப்படி நீங்கள் கருதுமாறே அவன் நடித்திருப்பான்!

வேவா:- என் என்னிடம் அவன் அவ்வாறு நடிக்கவேண்டும்?

முதலியார்:- அவன் மட்டுமா? உலகமே அப்படித்தான் சார்! ஒரு வேலையும் கிடைக்காதவர்கள் வெகு உத்தமர்களைப்போல் நடிப்பார்கள்! எதற்காக? ஏதாவது வேலை கிடைக்காதா என்பதற்காக! வேலை கிடைத்துவிட்டதோ! பிறகுதான் அவர்கள் சுயரூபத்தைக்காட்ட ஆரம்பிப்பார்கள். அப்படிப்பட்டவர்களில் ராஜனும் ஒருவனாக இருக்கப் படாதோ...?

வேவா:- இருக்கலாம் இருக்கலாம்! நீங்கள் சொல்வதைப் பார்த்தால், ராஜன் ஒரு சுத்த அயோக்கியப் பயல் என்றேதான் தோன்றுகிறது.

முதலியார்:- சந்தேகமே வேண்டாம்! நீங்களே பாருங்கள்! அவன் கைப்பட எழுதிய ரெண்டுலெட்ச ரூபாய் நூல் பேல்களின் ஸ்டாக் விவரமும், பிறகு அது மாயமாக மறைந்த விவரமும் காட்டுகிறேன்! [என்றுகூறி அழைப்பு மணியைத் தட்டுகிறார்.]

வேவா:- யாரை? பியூனைத் தானே! அவனை வெளியே அனுப்பி இருக்கிறீர்களே?

முதலியார்:- ஓ! மறந்துவிட்டேன்! சற்று பொறுங்கள் நானே போய் கொண்டு வரச் சொல்லுகிறேன்...

வேவா:- வேண்டாம் சார்! தங்களுக்கேன் அவ்வளவு சிரமம்?

முதலியார்:- அதனாலென்ன! பரவாயில்லை இருங்கள், இதோ வந்துவிடுகிறேன்! [என்று கூறிக் கொண்டே உள்ளே போகிறார்.]

வேவா:- [உடனே வேவா பைல்களைத் திறந்து அவைகளிலிருந்து சில முக்கிய குறிப்புகளை எடுத்து மறைத்துக் கொள்கிறார்.]

முதலியார்:- [ஒரு கணக்கபிள்ளையோடு திரும்பி வருகிறார்.] ஓய்! கணக்கப்பிள்ளை! அந்தக் கணக்குப் புத்தகங்களை இப்படிக் கொண்டாரும் [என்று கூறிவிட்டு வேவாவோடு ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்.]

கணக்கப்பிள்ளை:- [ஒரு ஓரமாகப் போய் நின்று] அடடடா...! நல்ல கணக்கப்பிள்ளை உத்தியோகமய்யா...! 'இன்கம்டாக்ஸுக்கு ஒரு கணக்கு! ஸெல்டாக்ஸுக்கு ஒரு கணக்கு!! பிளாக் மார்கட்டுக்கு ஒரு கணக்கு!!! இவுங்க வீட்டுக்கு ஒரு கணக்கு!!!! இப்போ இங்கே காட்டுறதுக்கு ஒரு கணக்கு.

ஒரு யோக்கியமான மனிதன் எத்தனை கணக்குன்னுதான் எழுதுவான்? அதுவும் இவுங்க கொடுக்கிற சம்பளத்துக்கு? சேச்சேச்சே ...! இந்தக் கணக்கப்பிள்ளை உத்தியோகத்தையே தொலைச்சுத் தலை முழுகிடலாமானுதான் தோணுது! ஆனால் இப்போ கிடைக்கிற இந்த அரைவயிறு பிண்டத்துக்கும் அப்புறம் திண்டாட்டம் வந்துவிடுமோ என்றும் பயமா இருக்கிறது...ஊ...ங்... என்ன செய்யலாம்...?

ரோஜா முத்தையா

முதலியார்:- ஓய்! கணக்கப்பிள்ளை! என்னங்காணும் அங்கேயே நின்றுவிட்டீர்?

கணக்கப்பிள்ளை:- இதோ வந்துட்டேன் எஜமான்...

முதலியார்:- அந்தக் கணக்கு விவரங்களை எல்லாம் அய்யாவிடம் கொண்டுபோய்க் காட்டும்!

வேவா:- எங்கே! இப்படிக் கொண்டு வாருங்கள் பார்க்கலாம்! அயோக்கியனை...யோக்கியனென்றல்லவா நினைத்துவிட்டேன்! [என்று கூறிக் கணக்குகளைப் பார்வை இடுகின்றார்.]

முதலியார்:- இந்தக் காலத்தில் ஆளைப் பார்த்தால் மட்டும் யோக்கியன், அயோக்கியன் என்று சொல்லிவிட முடியாது சார்! அவனுடைய வேலைகளைப் பார்த்தால்தான் தெரியும்!

பியூன்:-[அய்ஸ்கிரீம், ப்ரூட்ஷாலிட், பாதாங்கீர், சிகரெட் முதலானவைகளைக் கொண்டு வந்து கொடுக்கிறான்.]

வேவா:- இவைகளெல்லாம் ராஜனுடைய கையெழுத்துக்களே தான் சார்! சந்தேகமே இல்லை!! [கணக்கப்பிள்ளையை நோக்கி] உம். சரி! நீங்கள் கணக்குப் புத்தகங்களைக் கொண்டு போங்கசார்! பார்த்தது போதும்! [கணக்கர் போகிறார்.]

முதலியார்:- ஏன் சார்! ராஜனுடைய அயோக்கியத்தனத்திற்கு இன்னும் என்ன சாட்சி வேண்டும் சார்?

வேவா:-ஒண்ணுமே வேண்டாம் சார்! இதோ! 'உள்ளங்கை நெல்லிக் கனிபோல்' எல்லாம் விளங்கிவிட்டதே...

முதலியார்:- அவ்வளவுதான் சார்! உம். இவைகளைக் கொஞ்சம்...ருசி பாருங்களே...

வேவா:- அதற்கென்ன பார்த்துவிட்டால் போகிறது...! [கொஞ்சம் சாப்பிட்ட பிறகு] முதலியார்வாள்! வணக்கம்! நான போய் வருகிறேன்...

முதலியார்:- புறப்பட்டுவிட்டீர்களா...? சரி! போய்வாருங்கள்! ஏதோ நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். எல்லாம் உங்கள் நன்மையைக் கருதித்தான் சொல்கிறேன்! இனிமேல் அந்த ராஜன் விஷயத்தில் தலையிடுவதை அறவே மறந்துவிடும்...

வேவா:- இனிமேல் நீங்கள் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை! எல்லாம் நான் புரிந்துகொண்டேன்!! வணக்கம்!!

முதலியார்:- வ..ணா..க்...க...ம்?

### காட்சி 36.

[வீதி]

உறுப்பினர்:- சர்க்கிள் இன்ஸ்பெக்டர், வேவா,

கதை அமைப்பு:- [வேவா தான் அறிந்த உளவுகளைச் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு விளக்கிக் கூறுகிறார்.]

சர்க்கிள் இன்ஸ்பெக்டர்:- மிஸ்டர் வேவா! உம் கையிலிருக்கும் குறிப்புகளும், ரிக்கார்டுகளும் நம் சப் இன்ஸ்பெக்டர் சஞ்சீவிராவின் ஜோடனைக்கு முற்றிலும் மாற்றமாக இருக்கின்றனவே, இவைகளெல்லாம் உமக்கு எப்படிக் கிடைத்தன?

வேவா:- இன்ஸ்பெக்டர் சார்! இவைகளை நான் அடையப் பல அவதாரங்களும்எடுத்துலீலாவிநோதங்களும் புரிந்திருக்கிறேன் சார்!

ச-இன்ஸ்பெக்டர்:-ஏன்? கடவுளோடு போட்டி போடவேண்டும் என்ற எண்ணத்தாலோ?

வேவா:- கடவுளோடு போட்டி போடவெல்லாம் என்னால் முடியுமா சார்? அப்படியே முடிந்தாலும், ஆமை, மீன், பன்றி முதலிய அவதாரங்களெல்லாம் எனக்கு வருமா? வந்தாலும் நான் விரும்புவேனா......?

ச-இன்ஸ்பெக்டர்:-வேறென்ன அவதாரந்தானெடுத்தீர்!

வேவா:- முதலில் ஒரு பிச்சைக்காரன் அவதாரம் எடுத்தேன்! ஆனால் ஆண்டவனைப் போல் மூன்றடி மண்ணோ! அல்லது பக்தர்களுடைய பெண்டீர்களையோ யாசகமாக வேண்டுமென்று யாரிடமும் போய்க் கேட்கவில்லை!

வேறொனும் ஒரு மைனருடைய திருட்டையும், சப் இன்ஸ்பெக்டர், ரஞ்சன், ராகவன், ஆடிட்டர் முதலியோர் தாசி கமலா வீட்டில் நடத்தும் கபடநாடக ஒத்திகைகளையும் கண்டுபிடித்தேன்.

ச-இன்ஸ்பெக்டர்:- ஸபாஷ்! அப்புறம்?

வேவா:- இரண்டாவது, தாசிகளின் குல தெய்வமாகிய மன்மதக் கடவுள் குடியேறிய குடுகுடுப்பைக்காரன் அவதாரம் எடுத்தேன்! என்றாலும் ஈஸ்வரன் தவத்தையும் விஸ்வாமித்திரன் தவத்தையும் கெடுத்த மன்மதனைப்போல் நான் யாருடைய தவத்தையும் கெடுக்கவோ, அல்லது கிருஷ்ண பரமாத்மாவோடு சதா கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்குமாறு கோபிகைகள்மீது காமக் கணைகள் விடுத்த மன்மதனைப் போல் எத்தகைய ஆத்மாவுக்கும் அத்தகைய வேலையைச் செய்யவோ போகவில்லை!

அதே வேலனுக்கு ராமாயணத்திலிருந்து ஒரு கருத்துரை எடுத்து விளக்கினேன், மன்மதக் கடவுளின் பக்தர்களுக்கு பூஜா உணர்ச்சியை உண்டாக்கி, அவர்களிடம் சிறைப்பட்டுக்கிடந்த இந்த ரிக்கார்டுகளுக்கு விடுதலை அளித்துக் கொண்டு வந்துவிட்டேன். அவ்வளவுதான், இன்னும் ஒரே ஒரு அவதாரந்தான் மீதம் இருக்கிறது!

ச-இன்ஸ்பெக்டர்:- பரவாயில்லையே! உம், மிச்சமிருக்கும் அந்த ஒரு அவதாரம் என்ன? எப்போது? எங்கே? ஏன் எடுக்கப் போகிறீர்கள்?

வேவா:— சார்! அவதாரிகளையோ! அல்லது அவர்களுடைய ஆகமங்களையோ பற்றி இந்தமாதிரிக் கேள்வி கேட்பதிருக்கிறதே இதற்குப் பெயர்தான் நாஸ்திகம்! ஆனால் நீங்களோ பெரிய போலீஸ் அதிகாரி! உங்களுடைய கேள்விகளோ எந்தமாதிரியும் இருக்கலாம்! எனவே, பதில் சொல்லுகிறேன் கேளுங்கள்;

அடுத்து ஒரு மைனர் அவதாரம்! நாளைக் காலையில் தாசி கமலா வீட்டில் அவளுடைய உள்ளத்தில் சிறைப்பட்டிருக்கும் உண்மைகளை விடுதலை செய்வதற்காகத்தான்! அதற்காக உங்கள் உதவியும் வேண்டும் சார்!

ச-இன்ஸ்பெக்டர்:- அடடே! அவதார புருஷராகிய உமக்கா என்னுடைய உதவிகள்கூட வேண்டும்?

வேவா:- அவதார புருஷருக்கு மட்டும்தானா? ஆண்டவனுக்கே போலீஸ் உதவி இல்லையென்றால் அரைநாழிகைபேனும் கோவிலில் குடியிருக்கவே முடியாதுசார்!

ச-இன்ஸ்பெக்டர்:-என்ன சார்! நேற்றுத்தானே சி. அய். டி. உத்தியோகத்திற்கு வந்தீர்கள்! அதற்குள்ளாக இவ்வளவு உளவு அறிந்துவிட்டீர்களே......? சரிசரி! பிழைத்துக்கொள்வீர்கள் போங்கள்!

வேவா:-பிழைக்கத்தானே சார் வேண்டும்! [இருவரும் செல்கின்றனர்]

(2ம் பக்கத்தொடர்ச்சி)

யை அமுக்கி கட்டி வைத்து உதைத்துக்கொண்டிருக்கும் பொழுது, பக்கத்து வீட்டுப் பிள்ளை ஒன்று அங்கே வந்துநின்றது. அப் பிள்ளைக்கு வயது ஏழு இருக்கும். அந்தப் பிள்ளை சுவாமிகளை உதைப்பதைப் பார்த்து விட்டு, 'கோ' வென்று கத்த ஆரம்பித்து விட்டது. இதைக் கேட்டுத் திரும்பிய பரஞ்சோதி, திகிலடைந்தவனாய் நாம் இதுவரை செய்து வந்தது வெளியாகிவிடும்; இனியும் செய்ய முடியாது; என்று நினைத்து சுவாமிகளை விட்டு விட்டுப் பிள்ளையிடம் வந்தான். அப்பொழுது உதைபட்டுக்கொண்டிருந்த சுவாமியை மனைவி கட்டு அவிழ்த்து விட்டுச் சூட்டுக்கோலைக் காட்டவே, "தப்பித்தோம் பிழைத்தோம்" என்று ஓட்டமெடுத்து விட்டார். அந்தப் பிள்ளையைப் பரஞ்சோதி போகச்சொல்லிப் பார்த்தான்; பிள்ளை நகர்வதாக இல்லை. அவ்வளவுதான் கோபம் வந்துவிட்டது. கையிற் கிடைத்ததை எடுத்து வீசினான், குழந்தை இறந்துவிட்டது.

அதிலிருந்து தப்பிக்க நெடுநேரம் யோசித்து ஒரு முடிவைக் கண்டு, இறந்த பிள்ளையைத் துண்டாக்கிக் கறி சமைத்து சுவாமிகளிடத்தில் கொள்ளையடித்த சோற்றோடு பள்ளயம்போட்டுத் தயாராக வைத்திருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் அடுத்த வீட்டுக்காரர்கள் பிள்ளையைத் தேடிக் கொண்டு வந்தனர். அங்கே பிள்ளையைக் கறியாகச் சமைத்துப் பரப்பியிருப்பதைக் கண்டு, கேவிக் கேவிக் கூவியழுதனர். அது கண்ட பரஞ்சோதி, அய்யா! இது உங்கள் பிள்ளையில்லை; என்னுடைய பிள்ளையாக்கும்; நீங்கள் வேறு எங்காவது சென்று தேடுங்கள்; கடவுள் விருப்பத்தைப் பூர்த்தி செய்விக்க என் பிள்ளையைக் கறி சமைத்துள்ளேன்" என்றான். அதைப் பொய்யாக்குவதுபோல அப்பொழுது தூரத்தில் அவனுடைய பிள்ளை வந்து கொண்டிருந்தது. அதனைக் கண்ட அடுத்த வீட்டுக்காரர் விபரத்தைக் கேட்டனர்.

எத்தே தம் சொத்தா என்னும் சித்தனுக்கு அதனைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளவா வகை தெரியாது? தன் பிள்ளையை ஓடோடிச் சென்று தூக்கி வாரி அணைத்துக்கொண்டு "கடவுள் என் பக்தியை மெச்சி, பிள்ளைப் பாசத்தை அதிகநேரம் தடைபடுத்தக்கூடாது என்று எண்ணி என் குழந்தையைத் திருப்பித் தந்துவிட்டார்" என்று ஆனந்தக் கூத்தாடினான்.

அதற்குள், அங்கு ஊர்மக்களில் பாதிபேர் கூடி விட்டனர். பரஞ்சோதியின் அபூர்வசாதனைகளைக் கண்டு, கண்டு வியந்து கொண்டாடினர். அடுத்த வீட்டுக்காரர்கள் பிள்ளையைக்காணாது தேடி அலைந்துகொண்டிருந்தனர்.

இதைத் துண்டு, துக்கடாவாகக் கேள்விப்பட்ட சேக்கிழார் தம் கதையமைப்புத்திறனால், குழைத்துக் குழைத்து மெருகு பூசி, 'சிறுத்தொண்ட நாயனார்' என்று சிறக்கப்பாடிவிட்டார்! காலம் ஏற, ஏற அந்தப் பஞ்சப் பரஞ்சோதியையும், என்னையும், ஒன்றாக நினைத்து விட்டது உலகம்!" என்று தம் ஆத்திரத்தைத்தீர்த்துக் கொள்ளுவதைப்போல் கதையை முடித்தார், பல்லவர் தளபதி பரஞ்சோதி.

அவர் கூறியவைகளைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த நான், "என்னய்யா! பல்லவர் தளபதி! நாத்தீகப் பிரச்சாரம் நீர் கூடச் செய்கிறீர்? நாக்கு அழுகிவிடும்" என்றேன். அவர் வறட்டுச் சிரிப்புச்சிரித்தார். "சிரிக்காதேயும்" என்று கத்தினேன். "ஏனிப்படி ஏதேதோ உளரீங்க" என்று என் மனைவி என்னைத் தட்டி எழுப்பினாள். கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்துஉட்கார்ந்த நான், அப்பொழுது தான் அவ்வளவும் 'வெறுங்கனவு' என்று உணரமுடிந்தது.

"நாவன்னாக்கீனா"

## அநுதாபம்

குன்னூர் திராவிட இளைஞர் மறுமலர்ச்சிக் கழகச் செயலாளர் தோழர் தி. பெ. கோவிந்தன் அவர்கள் தகப்பனார் இம்மாதம் 13-ம் நாள் இயற்கை எய்தினார். இவரின் பிரிவால் வருந்தும் கோவிந்தராசுக்கும், இவரது குடும்பத்தினருக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். மறுமலர்ச்சி கழகத்தார்.


## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-
நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE

ரோஜா முத்தையா